போன் நெ. 15. விலை 2 அணா REGD NO 4642

திராவிட நாடு

மலர் 12 | 22—11—53 | இதழ் 21

"கடவுள், வியாபாரம்!"

"சலங்கை பூட்டிய வண்டியில் 'ஜாம், ஜாம்' எனப் போகிறாரே, ஜம்புலிங்க முதலியார்; அவர் யார் தெரியுமோ? பெரிய வியாபாரி! இரண்டு மூன்று கோயில்கள் கட்டியிருக்கிறார்!"

"ஏன்? கள்ள மார்க்கெட் வியாபாரம், பலமோ? ஊரில் ரொம்பக் கெட்ட பேரோ?"

*

"காலையிலெழுந்ததும் பொன்னுசாமிக்கு என்ன வேலை தெரியுமோ? நன்றாகக் குளிப்பார். நாமம் போட்டுக்கொள்ள நாலு நாழிகையாகும். வெளியில் கிளம்புவதென்றால், நெற்றியில் திருமண் இல்லாமல் கிளம்பமாட்டார்!"

"யார்? அந்த 'புரோக்கர்' பொன்னுசாமிதானே! நிமிஷத்துக்குப் பத்துப் பொய் சொல்லி, எத்திப் பிழைக்கிறானே, அவன்தானே!"

*

"அந்தி நேரம் இருட்டிக்குள் நுழையும் அழகுபோல, அனுதினமும் மாலை வேளையில் இந்தக் கோயிலுக்கு வருவாள், கோமளம். தினசரி, அர்ச்சனை செய்யாமல் திரும்புவதில்லை!"

"எந்தக் கோமளம்? விழி காட்டி, மொழி நீட்டி, உடலை விற்று உயிர் வாழ்கிறாளே, அவள்தானே!"

"அதோ வருகிறானே, பூஜாரி பூர்ணலிங்கம்; அவன் நெற்றியிலிருக்கும் நீற்றுப் பட்டையைக் கண்டு மயங்கிடாதே. உள்ளம், காமச் சேறு!"

*

"அரங்கநாதர் ஆலயத்தில், சுவாமி சன்னதிக்குள், 'ஆனந்த விகடன்' வைத்துப் படிப்பார், இந்த அர்ச்சகர்"

"ஆனந்த விகடன் என்றால் எது? பத்திரிகையா?"

"பத்திரிகையல்லப்பா; பாட்டில்! உயர்ந்த 'வஸ்து'வுக்கு, அந்த வட்டாரம் வைத்திருக்கும் புனைப்பெயர் இது"

*

அம்மனுக்குப் பின்னால் சாராயப் புட்டிகளை வைத்திருந்தவன்; வழக்கு! கோயில் சொத்தைக் களவாடிய குருக்களைப் போலீசார் கைது செய்த செய்தி!—இவ்வண்ணம் ஏடுகளில், பல செய்திகளைக் காண்கிறோம். தலைப்பில் தரப்பட்டது போன்ற உரையாடல்களையும், அடிக்கடி கேட்கிறோம்.

இந்த விஷயங்களைச் சிந்திக்கும்போது, ஆண்டவன்மீது பக்தி கொண்டிருப்பதாக வேஷமிடுகிறார்களே, அவர்களைப்பற்றிய பல உண்மைகளை, அறியமுடியும்.

எத்திப் பிழைத்து எழுநிலைமாடி கட்டியவன்—நம்பியோரை நட்டாற்றில் விட்டு பணம் குவித்த நாசகாலன்—கள்ள மார்க்கெட்டில் கொள்ளை லாபம் சம்பாதித்தவன்—அக்கிரம வழிகளால் உயிரை வளர்த்து, ஆடம்பரமாக வாழ்பவன்—ஆகியோர், 'ஆண்டவன்' மீது காட்டிடும் அபார பக்திக்குரிய காரணத்தை, ஊரார் பேசாமலிருப்பதில்லை.

இந்தக் காரணத்தை, நாம் எடுத்துச் சொன்னால், நம் குரலில்—குமுறல் தென்படும்.

நம்மை நாத்திகரென்போர் எடுத்துரைக்கும்போது, அவர்கள் குரலில்—பெருமூச்சு காட்சியளிக்கும்.

இந்த சிறு வித்தியாசம் தவிர, இந்த விஷயம் குறித்து, இருவர் கூறுவதிலும், எள்ளளவும் வித்தியாசம் காண முடியாது.

"பணம் வந்ததும், பாமரனுக்குப் பக்தி வந்துவிட்டதப்பா!"

"பக்தியைக் காட்ட, இதுவாப்பா வழி? ஆண்டவனென்ன, அதிர்வேட்டும், ஆகாயவெடியுமா கேட்கிறார். எல்லாம், இவன் தன் பணக்கொழுப்பைக் காட்டச் செய்கிற செலவு!"

"இல்லையப்பா, இல்லை! தன்னுடைய அட்டூழியங்களை மறைக்க, இந்தப் பக்திப் போர்வையைப் போர்த்திக்கொள்கிறான்"

இவ்விதம், எல்லோரும் கூறுவதுண்டு—சாதாரணமாக. காரணம், பணக்காரனின் பக்தி, ஆன்மாவோடு

இருந்துவிடுவதில்லை — அவனுக்குள்ள வசதி, ஆடம்பரம்—ஆகியவைகள் மூலமாக வெளிப்படுகிறது. இந்தக் காரியங்களில், இவர்கள் பணத்தைச் செலவழிப்பதும், 'ஏதோ ஈஸ்வரனைக் களிப்பதற்கு' என்பதற்காகவல்ல. 'ஆண்டவன்' பெயரைச் சொல்லி, ஏதோ சில காரியங்களைச் செய்துவிட்டால், தான் செய்யும் சமூக விரோதமான செயல்களுக்கெல்லாம் மன்னிப்பு கிடைத்துவிடுமென்கிற மனோபாவம், அவர்களிடம் இருந்துவருகிறது. இரும்பு வியாபாரத்தில் கொள்ளை லாபம் அடித்த ஏகாம்பரம், வரதராஜ சுவாமிக்கு, 'வைரமுடி' செய்யும் கைங்கர்யத்தில் ஈடுபட்டிருக்கிறான் என்றால், அவனுடைய பக்திப் பிரவாகம் குறித்து, ஏடுகளும், புலவரும் புகழ்ந்து எழுதுவர்! வைரமுடி சூட்டும் விழாவில் வந்திருந்து பூஜிக்க, அமைச்சர்களும் ஓடிவருவர். ஆதீனத்துத் தம்பிரான்களும், அழகான பொன்னாடைகளை அணிவித்துப் புகழுரை படிப்பர். ஏகாம்பரத்தின் வைரமுடிக் கைங்கர்யம், வெகு விமரிசையாக நடைபெறும்போது, அவன் என்னென்ன கொள்ளையடித்தான்—எப்படி எப்படிப் பொருள் குவித்தான்—கஷ்டமடைந்து கண்ணீர் சிந்திய ஏழைகள் எத்தனை—என்கிற அத்தனை விஷயங்களும் எவர் மனதிலும் எழும்பாது. ஏகாம்பரம், தர்மவானாகிவிடுவார்! இந்துமத அறநிலைய இலாக்காவினரால், விரைவில், கோயில் 'டிரஸ்டி'யாகவும் ஆக்கப்படுவார்!! ஏகாம்பரத்தின் பக்திப் போர்வை — அவனுடைய அட்டகாசங்களை, மக்களின் கண்களிலிருந்து மறைக்க உபயோகப்படுகிறது. அவன் செய்த பித்தலாட்டங்களை. சர்க்காரின் சட்டத்திலிருந்து தப்பவைக்கிறது. குடிகாரன்—கூத்திக் கள்ளன்—கொலை செய்தவன்—ஏழைகளை வாட்டி இலாப மூட்டை கட்டியவன் — எவனாயினும், பக்திப் போர்வை பூண்டுவிட்டால், அவன் 'லைசென்ஸ்' பெற்றவனாகிவிடுகிறான். இல்லையெனில், எத்தனையோ கொலைகாரர்கள், சந்நியாசி உருவில் உலவ முடியுமா! எவ்வளவோ குபேரர்கள்; சட்டத்திலிருந்து தப்பி வாழ முடியுமா!! தாசி கோமளம், அன்னநடை போட்டுவந்து, தன் அபார பக்தியைக் காட்டிக்கொள்வதைக் கண்டு உலகம்தான் வியக்குமா?

*

கடவுள் பக்தர்!—இந்தச் சொல், இன்றுமட்டுமல்ல; அன்றும், எத்தனையோ அட்டகாசங்களை மூடி மறைக்கும் திரையாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அன்னையைப் புணர்ந்து, தந்தையைக் கொன்ற மதுரைப் பார்ப்பன வாலிபன், உலகத்தின் நிந்தனைக்காளாகாது, திருவிளையாடற் புராணம் படிப்போரெல்லாம் போற்றக் காரணமென்ன? கூடாபிடி செய்து, வருவோர் போவோரையெல்லாம் வழிமறைத்துக் கொள்ளையடித்த திருமங்கை, ஆழ்வாராதியர்களுள் ஒருவராகத்தான் கருதமுடியுமா!! இந்தப் பக்திப் போர்வையைக் கண்டு மக்கள் மயங்குவதால்தான், 'கும்பகோணத்தில் சாமியார் மோசடி, 'பித்தளையைத் தங்கமாக்குவதாக சந்நியாசி கம்பி நீட்டினான்' முதலிய செய்திகளை, நாம் காண்கிறோம். பல இடங்களில், பக்தி உருதாங்கிய வாலிபர்கள், வனிதாமணிகளின் ஆசைக் காதலர்களாகவும் இருக்கமுடிகிறது! இந்தப் போர்வை, மண் குடிசையில் வாழ்பவனையும் மயக்குகிறது — அரசியல் தலைவனையும் அல்லாடச் செய்கிறது—அதிகாரம் தாங்கிய உத்தியோகஸ்தர்களையும் ஏமாற்றிவிடுகிறது. அங்ஙனம், இந்தப் போர்வை பூண்டு, ஏமாற்ற முயன்ற இருவரின் செய்தி ஒன்று ஆஜ்மீரிலிருந்து, அண்மையில் கிடைத்திருக்கிறது.

ஆஜ்மீர் சிறையில் இரண்டு கைதிகள் அடைக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள்மீது கொலைக்குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

கோர்ட்டில் விசாரிக்கப்பட்டு, அவர்களிருவரும் குற்றவாளிகள் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. விதிக்கப்பட்ட தண்டனையோ, சாதாரணமானதல்ல — மரண தண்டனை!

மரண தண்டனை பெற்ற மறுநாள் முதல், அவர்களிருவருக்கும் கடவுள் பக்தி அதிகரித்துவிட்டது. தண்டனை நாள் நெருங்க நெருங்க, அந்த 'பக்தர்களின்' பஜனைச் சப்தமும், கடவுள் நாம உச்சரிப்புக் கூச்சலும், காதைப் பிளக்க ஆரம்பித்தது. இதைக் கண்ட சிறையதிகாரிகள், அந்தப் பக்தர்களைக் கண்டு வியந்தனர். அந்தக் கைதிகளிருவரும், தமக்கோர் கிருஷ்ணபரமாத்மாவின் படம் வேண்டுமென்று வேண்டினர். பக்தர்களின் கோரிக்கையை மறுக்கக்கூடாதல்லவா? சிறையதிகாரிகள், நல்ல படம் ஒன்று வாங்கிவந்து தந்தனர். கைதிகள், கடவுளைப் பூஜிக்க, ஊதுபத்தி வேண்டுமென்று வேண்டினர். அதுவும், வழங்கப்பட்டது. பத்தியைக் கொளுத்திவைத்துவிட்டு, 'அந்தப் பக்தர்கள்' உரத்த குரலில் ராமாயணம் படித்தனர்! பஜனை செய்தனர்! கிருஷ்ண பரமாத்மாவின் படத்தின் முன்னின்று, மெய்மறந்து, அவர்கள் பக்தி செலுத்தும் காட்சியைக் கண்டவருக்கு, உள்ளம் சிலிர்த்ததாம். சிறையதிகாரிகள் கூட, அவர்களின் பக்திகண்டு, வியந்தனராம். இந்த அளவுக்கு பக்தியும் பாராயணமும் செய்த அவர்களின் குட்டு, கடைசியில் வெளியாயிற்று! கைதிகளில் ஒருவன் உரக்க, ராமாயணம் படிப்பான் அல்லது பஜனைப் பாடல்களைப் பாடுவான். அப்போது, மற்றொரு கைதி, அரமும் கையுமாக ஜன்னல் கம்பியைப் பதம்பார்த்துக் கொண்டிருப்பான். அரத்தால் அறுக்கும்போது ஏற்படும் சத்தத்தை, பஜனை பாடலின் குரல், வெளியே கேட்காமல் தடுத்துவிடும். அறுத்த கம்பிகளை வெளியே தெரியாமலிருக்க ஊதுவத்திக் குழாய்களைப் பொருத்தி, அதனை மறைத்து கிருஷ்ணபரமாத்மாவின் படத்தை மாட்டிவிட்டனர். காவல்காரன் இல்லாத சமயம், கம்பிகளை அறுப்பதும்; அவன் வந்துவிட்டால், பரமாத்மாவின் முன்னால் கைகூப்பி மெய்மறந்து நிற்பதும்,

தோழர் கருணாநிதி

இம்மாதம் 21ந் தேதி சனிக்கிழமை விடுதலையடையும் தோழர் கருணாநிதி அன்று மாலை திருச்சியில் நடைபெறும் வரவேற்பில் கலந்து மறுநாள் 22ந்தேதி காலை கல்லக்குடி தொண்டர் முகாமுக்குச் சென்று பார்வையிட்டுவிட்டுப் பின்னர் திருச்சி தேவர்ஹாலில் நடைபெறும் மாணவர்கழக துவக்குவிழாக் கூட்டத்தில் கலந்துகொண்டு, அன்று பிற்பகல் 1-30 மணி ரயிலில் புறப்பட்டு திருவாரூர் செல்கிறார். 22 ஞாயிறு மாலை திருவாரூர் வரவேற்பில் கலந்துகொள்வார்.

இந்த வேலையைச் செய்துவந்தனர். இவர்களின் சூதினை, எப்படி அறிய முடியும், அதிகாரிகளால்? அதுவும் அணிந்திருப்பது பக்திப் போர்வையாயிற்றே! எனவே, இவர்களின் பக்தியைப்பற்றிய செய்திகளே, வெளியில் பரவின!

கடைசியில் தமது காரியம் வெற்றி பெற்றதும், சிறையினின்றும் தப்பி, வெளியே வரும்போது, தற்செயலாக அகப்பட்டுக் கொண்டனர். ஆனால், அவர்களது நடிப்பைக் கண்டு—மெய்மறந்து பக்தி செய்வதாகவும், சிறையில் தவமெனவும், பலப்பல விதமாக அந்தக் கொலைகாரர்களைப்பற்றிப் புகழுரைகள் கூறிய சிறையதிகாரிகள், இப்போது விழிக்கின்றனர்!!

விசித்திரமான சம்பவம், இது. ஆனால், ஆஜ்மீரில், அண்மையில், நடந்தது.

கொலைகாரர்களைத் தப்பச்செய்யுமளவுக்கு பக்திப் போர்வை, அதிகாரிகளைக் குருடாக்குகிறது.

அதனால்தான், எவரும், இந்தப் போர்வையை எளிதில் போட்டுக் கொண்டு விடுகின்றனர்.

இதிக்கண் நேராமல் தடுக்க, பக்திப் போர்வை, மிகமிகப் பயனுள்ளதாக மிளிர்கிறது, இன்று.

விஞ்ஞானக்கண்ணுடையோரானாலும், உலக மேதைகளானாலும், வீராதி வீரர்களானாலும், இந்தப் போர்வையினைக் கண்டால், மயங்குகிறான்.

இதனாலேயே, எவரும், இந்தப் போர்வையை எளிதில் தரித்துக் கொள்ளுகின்றனர்! மக்களின் மனதிலும் — அரசாங்கத் தூதர்களின் உள்ளத்திலும்—இந்தப் பக்திப் 'பாசி' படர்ந்திருக்கும் வரையில், எத்தனுக்கும் ஏமாற்றுக்காரனுக்கும் கொண்டாட்டம்தான்! இதனை நன்கறிந்திருக்கிற காரணத்தாலேயே, ஆச்சாரியார், எது நேர்ந்தாலும் இந்தப் போர்வையை எடுத்து வீசுகிறார்—இந்தப் பக்திப் போர்வையில், கடவுளைக் காட்டி வியாபாரம் செய்யும் அவரது இனத்தவரும், மறைந்து நின்று வாழ விரும்புகின்றனர். "இந்தப் போர்வையிருக்கும் மட்டும், நாடு நம்முடைய வேட்டைக் காடுதான்." என்பதை, இந்நாட்டில் கடவுள் வியாபாரத்தில் கைதேர்ந்திருக்கும் ஆரியம் நன்கு உணர்கிறது. அதனாலேயே, "ஆலயம் தொழுவது சாலவும் நன்று. ஔவையார் பார்ப்பது யாவர்க்கும் நன்று", என்று விளம்பரம் செய்கிறது. அதனை, ஆச்சாரியார்போன்ற, சமுதாயத்தின் மேல்தட்டுக்காரர்களும், ஆவலோடு ஆதரிக்கின்றனர்—மகேசன் மன்றத்தின் ஆதரவு தேடவும் முற்படுகின்றனர். அவர்கள் நோக்கம், 'கடவுள் வியாபாரம்', தங்குதடையில்லாமல்நடக்கவேண்டுமென்பது. அதற்கு, எதைச் செய்யவும், தயங்கமாட்டார்கள், எத்தர்கள்! தமது வேஷத்தைக் கண்டுத் தமிழகம் மயங்கும் எனும் தைரியம் அவர்களுக்கிருப்பதால்!! ✲

[வீரன் பேட்டி]

கண்ணீர்

"'அவாளுக்கு பணிவிடை செய்வதை விட்டு, அதைக் காட்டிலும் விசேஷ லாபத்தைத்தரும் தொழிலைச் சூத்திரர்கள் செய்தார்களாகில் அவர்கள் அல்பாயுசை அடைந்தவர்களாகிறார்கள். மேலும் மரித்து நரகத்தை அடைகிறார்கள். இதில், சந்தேகமில்லை.''

*

"இதைப்போடு, பத்திரிகையில்!" என்று கொண்டுவந்துகொடுத்தான் வீரன்,

இப்போதெல்லாம், ஆச்சாரியார் போகுமிடமெல்லாம், போவது தான் அவன் வேலை.

"வீரா! இது யார், ஆச்சாரியார் பேசியதா?" என்று கேட்டேன்.

"அவரோடெ, பாட்டன்!" என்று பதிலளித்தான், வீரன்.

"கோபப்படாமல், கூறு, வீரா!"

"தோழா! எனக்கேன் கோபம் வரப்போகிறது? இது யார் சொன்னது என்று உனக்குத் தெரியவில்லையென்றால், சொல்லுகிறேன்" என்று அமைதியோடு சொன்னான். அவனிடம் இந்த அமைதியை நான் கண்டதேயில்லை! கண்களில் நீர் வேறு கலங்கியிருந்தது!!

"யார், சொன்னது வீரா!"

"அவரோடெ, மூப்பாட்டன்,,,"

"யார்?"

"மேலே குறிப்பிட்டதுபோல, ஆச்சாரியாரின் முப்பாட்டன்கள் வகுத்த "பராசரஸ்மிருதி"யில், தீட்டப்பட்டிருக்கிறது"

"அதற்காகவா, கண்ணீர் கலங்குகிறது, உனக்கு!"

"இல்லை! இதற்காக இல்லை!!"

"பின், எதற்காக?"

பதில் கூறவில்லை. பரீட்சை வைப்பதுபோல், கீழ்க்கண்ட கேள்விகளை எழுதி என்னிடம் வைத்தான். பதிலெழுதச் சொன்னான். கேள்விகளுக்கு நீங்கள் பதிலெழுதவேண்டாம். பிறருக்குச் சொன்னால், போதும்.

1. ஆறறிவு படைத்தவன், மனிதன், என்பது உண்மைதானா?

2. 'மனிதர்கள்' மந்திரிகளாகக் கூடாது, என்பது ஆச்சாரியாரின் கருத்தா?

3. திராவிட இனத்தலைவரை அவர் மனிதர்களாகக் கருதுவதில்லையா?

4. அனுமார்—ஆடு—மாடு என்று 'நமது' மந்திரிகளை அழைக்கும் ஆச்சாரியார், டாக்டர் கிருஷ்ணாராவ் போன்றோருக்கு அந்தப் பட்டங்களைச் சூட்டாததேன்?

5 'அனுமார்', என்பது கோவை சுப்பிரமணியத்தையும், 'ஆடு' என்பது திருமங்கலம் ராஜாராமையும், 'மாடு' என்பது கோவை பழனிசாமி கவுண்டரையும் குறிக்கும் சொற்கள் என்று, காங்கிரசிலிருக்கும் 'அவாள்' கேலி பேசுவது, உண்மையா?

நான், கேள்விகளைப் படித்துக் கொண்டிருக்கேன்! வீரன், தன் கண்ணீரைத் துடைத்தபடி வெளியேறினான்!!

✲

"திராவிடம்"

இலங்கை— கொழும்பிலிருந்து தோழர் நல்லைக் கோகிலனை, ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் 'திராவிடம்' இதழைக் கண்டோம். வளரும் 'திராவிடம்' வாழ, எல்லா நலன்களும் பெறவேண்டுமென, வாழ்த்துகிறோம். புதுமைப் பாதையில் புகும், திராவிடத்தின் சீரிய குறிக்கோளுக்கு. ஈழம், ஆதரவு காட்டுமென நம்புகிறோம், — 'திராவிடம்'— பிரிட்ஜ்ரோடு, கொழும்பு 2.

கேரளத்தில் 'பணப் பாம்பு'!

இறக்குமதி செய்யப்படுகிறார்!— திருவாங்கூரில் நடைபெறப்போகும் பொதுத்தேர்தலையொட்டி தோழர் எஸ். கே. பட்டீல் இறக்குமதி செய்யப்படப்போகிறார்!!

பட்டீல், பம்பாய் மாகாண காங்கிரஸ் தலைவர், அவர், திருவாங்கூரில் 'காங்கிரஸ் சார்பில் வேலை செய்ய, அனுப்பப்படப் போகிறாராம்.

திருவாங்கூரில் காங்கிரஸ் தலைவர்கள் இல்லையோ, என்கிறீர்களா? நிறைய இருக்கிறார்கள், ஆனால், அவர்கள் இலாயக்கற்றவர்களாம்— காங்கிரஸ் சார்பில், தேர்தலை நடத்த அதற்காக அவர்களுக்குத் தலைவராக யிருந்து, பொதுத்தேர்தலில் எதிர்க் கட்சிகளை முறியடிக்கப்போகிறாராம்.

திருவாங்கூரில் நடைபெற்ற, கடந்த தேர்தலில், காங்கிரஸ் வீழ்ச்சியடைந்ததையும், முற்போக்குக் கட்சிகள் வெற்றிமுரசு கொட்டியதையும் அறிவோம், நாம்.

அதனால், உலகமெங்கணும் பரபரப்பேற்பட்டது—குறிப்பாக அமெரிக்கர், ஆச்சரியமடைந்தார்கள். கேரளத்தின் மீனும் காப்பியும் அமெரிக்காவில் பிரசித்திபெற்றவை. அமெரிக்க முறையில், சச்சிவோத்தம சர். சி. பி. காலத்தில், அரசுத் திட்டங்கள், அமுல் நடத்தப்பட்டதாக விளம்பரம் செய்யப்பட்ட இடம், திருவாங்கூர். இதனால், அமெரிக்கருக்கு, கேரளத்தைப்பற்றி நன்கு தெரியும். அந்தக் கேரளம் தமது தனிப்பெருமைகளாலே காங்கிரசாரை மண்கவ்வச் செய்துவிட்ட தென்பதை அறிந்த அமெரிக்கர், இந்தியத்தலைவர் பண்டிதரை, ஆச்சரியத்தோடு பார்த்தனர்.

"30 கோடி மக்களின் முடிசூடா மாணிக்கம் என்று சொல்கிறார்கள். ஆனால், அவரது தலைமைக்குட்பட்ட பூபாகத்திலிருக்கும், கேரள பூமி, நேருவின் கட்சியை மண்கவ்வச் செய்ததாமே!"

"பண்டித நேருவைப்பற்றி வெளிநாடுகளில் செய்யப்படும் விளம்பரம், அதிகம். ஆனால், உள்நாட்டில் அவரது கட்சியை மதியாதோர் ஏராளம்!"

"பூ! இவ்வளவுதானா?"

இவ்விதமெல்லாம், அமெரிக்கர், பேசலாயினர். அதோடு, மீறியுமடைந்து, தமது பிரதிநிதிகளை, கேரளத்துக்கு அனுப்பி, நிலைமைகளைக் கண்டுவரச் செய்தனர்.

அப்படி வந்தவர்களில் ஒருவரான ஸ்டீவன்சன், திருவாங்கூரின் பகுதிகளைச் சுற்றிப்பார்த்துவிட்டுச் செல்லும்போது. திருவாங்கூரில் கம்யூனிசத் தொல்லை, வளர்கிறது என்பதையும் விவரித்துச் சென்றார்.

இது, பண்டிதரின் உள்ளத்தில், கூரிய அம்பைப் பாய்ச்சியதுபோலிருந்தது. அமெரிக்காவில் தனக்குள்ள புகழையும், செல்வாக்கையும், கருகச்செய்வதுபோல காட்சியளித்தது. 'எங்கே, இனி, நம்மை நம்பி, அமெரிக்கா, கடன் கொடாதோ?' எனும் கவலையையும் உண்டாக்கிவிட்டது, பண்டிதருக்கு.

அக்கவலையை அதிகமாக்குவதுபோல், அமெரிக்கரில் சிலரும் பேச ஆரம்பித்தனர்.

இந்தக் கண்டனப் பண்டிதர், தன்னுடைய ஜோதி சுடர்விட்டெரியதாகக் காட்டிக்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளானார். இந்த நெருக்கடியான நேரத்தில், அவரது புகழுருக் குலைக்கும் விளைவிப்பது போல, திருவாங்கூர் காங்கிரசாட்சியை முற்போக்கினர், கவிழ்த்துவிட்டனர்! தோற்கடித்தனர்!!

இந்த நிகழ்ச்சி, வெந்த புண்ணில் வேலைப்பாய்ச்சியது போலாயிற்று, பண்டிதருக்கு.

'ஐயையோ! இந்தக் கம்யூனிஸ்டுகளின் சர்க்கார் ஏற்பட்டுவிடும் போலிருக்கிறதே......"

'என்ன நினைப்பார்கள், அமெரிக்கர்கள்!"

"உலகம்தான் நம்மைப்பற்றி என்ன நினைக்கும்!"

இவ்விதக் கவலைகள் பண்டிதர் முகத்திலே படரவே, கொஞ்சமும் கூடத் தயங்காது, சட்டசபையைக் கலைத்துவிட்டு, மறுதேர்தல் நடத்துமாறு உத்திரவிட்டுவிட்டார்.

தேர்தல் நடைபெறப்போகிறது.

இந்தத் தேர்தலில் எப்படியாவது காங்கிரசுக்குப் பெரும்பான்மையான ஸ்தானங்களைப் பிடித்துவிட வேண்டும், என்று காங்கிரஸ் மேலிடத்தார், கருதுகின்றனர்.

திருவாங்கூர் தேர்தலை, தன்னுடைய மானப்பிரச்னையாகக் கருதுகிறார், நேரு பண்டிதர்.

இதனால், கேரள முழுமையும் தானே சுற்றுப்பயணம் செய்யப் போவதாகத் தெரிவித்துள்ளார்.

இதற்கு முதல் நிகழ்ச்சியாக, உள்நாட்டு மந்திரி கட்ஜுவை, அனுப்பி சங்கநாதம் செய்யச் செய்திருக்கிறார்.

இப்போது எஸ். கே. பட்டீலை, அனுப்பி, தேர்தல் முழுவதையும் நடத்தச் செய்யப்போவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பட்டீலுக்கு, கடந்த தேர்தலில், நல்ல பெயர்! பம்பாயில், எதிர்க் கட்சிகளைத் தோற்கடித்து, காங்கிரசுக்கு வெற்றி தேடிக்கொடுத்ததாக, எல்லோரும் போற்றுகின்றனர். இதற்குக் காரணம், பட்டீலுக்கு, பம்பாய் ஆலைஅதிபர்களின் உதவி, ஏராளமாகக் கிடைத்ததேயாகும். இன்றும், இவர், அவர்களின் செல்லப்பிள்ளைதான்!

'திருவாங்கூர், கம்யூனிஸ்டு நாடாகிறது. இதைத் ஒழித்துக் கட்ட வேண்டும்" என்று, ஆலையரசர்களிடம் சொல்லி, அதற்கெனப் பணத்தைக் குவிக்கும் நிலையிலிருப்பவர், பட்டீல்தான். பம்பாய் தானே, இந்திய உபகண்டத்தின், பணத்தோட்டம்! எனவேதான், பண்டிதர், அவரைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்.

எனவே, வரப்போகும், திருவாங்கூர் பொதுத் தேர்தலில், 'பணப் பாம்பு' யார்யாரை, என்னென்ன செய்யப்போகிறதோ, — தெரியவில்லை!

ஆனால், நிச்சயமாக, நம்பலாம்— பணம்தான், தேர்தலை, நடத்தப் போகிறது.

முற்போக்குக் கட்சியினரோ, தமது 'குணம்' ஒன்றையே சொத்தாக வைத்திருப்பவர்கள்.

மக்களின் தீர்ப்பு, எந்தப்பக்கம் என்பதை எல்லோரும் அறிவோம்.

'என்னை அழிக்கலாம்-ஆனால்...!'

"என்னைச் சாகடிக்கலாம். ஆனால், என்னுடைய இயக்கத்தைச் சாகடிக்க முடியாது."

*

"வெளிநாட்டுக்காரனை வெளியேற்றி, நாட்டின் சுதந்திரத்தைக் காப்பாற்றினேன். நமக்குள்ள பெரிய செல்வமான எண்ணெய்க் குழாய்களை தேசவுடைமையாக்கினேன். இதுவா, குற்றம்?"

*

"ஏனிந்த விசாரணை நாடகம் நடத்துகிறீர்கள். என்னால் எதுவும் கூறமுடியாது நான், மன்னிப்பும் கேட்கப்போவதில்லை. என் சாவு கேட்டு, உலகம், உங்கள் முகத்தில் காறித் துப்பட்டும்!"

*

அழுகிறார்! அலறுகிறார்!!

அடிக்கடி மூர்ச்சை போட்டு வீழ்கிறார்.

மேஜைகளைக் குத்துகிறார்.

வீராவேசமாகக் கத்துகிறார்.

சர்க்கார் வக்கீலை, சரமாரியாக ஏசுகிறார்.

'ஏ! காட்டிக் கொடுப்போர்களே' —என்று கர்ணகடூரமாகப் பேசுகிறார்.

ஆனால் அந்தத் தீர்ப்பை, 'பணம்' மூடிவிட முயலும்— இந்த முறை.

அந்த முயற்சியை வீழ்த்தி, காங்கிரஸ் திமிருக்கு, திருவாங்கூர் சமாதி கட்டுமென, எதிர்பார்க்கிறோம்.

இறக்குமதி செய்யப்படும் பட்டலின் முகத்தில், கரிதூவி, அனுப்பும் என்று நம்புகிறோம்.

இவ்வளவு தலைவர்களிருக்கும்போது, பம்பாயிலுள்ள பட்டலை அனுப்பி, வெற்றிகாண முயலும்; நேருபண்டிதரின், நெறியற்ற போக்கை, கேரள மக்கள், வன்மையாகக் கண்டிப்பார்களென்று நம்புகிறோம்.

*

சிலசமயங்களில், குரல் கம்முகிறது.

கூடியிருப்போரைப் பார்த்துக் கோவென்று கதறுகிறார்!!

*

பாரசீகத்தின் முன்னாள் பிரதமர் டாக்டர் முஸாதீக், இவ்வண்ணம், கோர்ட்டில் கோலாகலம் செய்வதாகப் பத்திரிகைகள் கூறுகின்றன.

தன்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை மறுத்து, அவர் வாக்குமூலம் கொடுக்கும்போதுதான, 'என்னை நீங்கள் கொல்லலாம். ஆனால், என்னுடைய இயக்கத்தைச் சாகடிக்கமுடியாது' என்று அவர் கூவியதும்.

தெஹ்ரானில் கடந்த சில நாட்களாக நடந்தவரும், இந்த உலகப் பிரசித்திபெற்ற வழக்கின் விபரங்கள் யாவும், நமக்குக் கிடைக்கவில்லை. எனினும், அங்கொன்றும் இங்கொன்றுமாக ஏதோ செய்திகள் கிடைத்துக்கொண்டுள்ளன. அவைகளைக் கவனிக்கும்போது, டாக்டர் முஸாதீக்கின் உள்ளம், என்ன பாடுபடுகிறது என்பதை அறியமுடிகிறது—நம்மால்.

அவர்மீது, சுமத்தப்பட்டிருப்பது, ராஜத் துரோகக் குற்றச்சாட்டு.

அவர் காலத்தில் உதவிகள்பெற்ற நீதிபதிகளும், வழக்கறிஞர்களுமே—இன்று, அவர்மீது மேற்படிக் குற்றத்தைச் சாட்டுகின்றனர்.

அவரோ, மேற்படி குற்றச்சாட்டை ஏற்கவில்லை. நீதிமன்றத்தை, தன்னுடைய குரல் ஒலிக்கும் இடமாகக் கருதி கூவுகிறார்.

"என் நாட்டின் வாழ்வில் சுகம் மலர வேண்டுமென ஆசைப்பட்டதா, ராஜத் துரோகம்?"

"வெள்ளையன் கையில் சிக்கிக் கிடந்த எண்ணெய்க் கம்பெனிகளை தேசவுடைமையாக்கினேனே, அதுவா, ராஜத்துரோகம்?"

என்று கர்ஜித்தபடி கேட்கிறார்! அவரது கர்ஜனையை, பாரசீக அதிகாரம் தாங்கிகள், அலட்சியமாகக் கருதுகின்றனர்!! ஆனால், அவரது மக்களோ, தமது தலைவரை விடுதலை செய்யவேண்டுமென்று, வீர முழக்கம் செய்கின்றனர்.

இப்படி, விடுதலை முழக்கம் செய்யும் முஸாதீக் கட்சியினரை, பாரசீக சர்க்கார் விட்டுவைக்கவில்லை. சுட்டுத் தள்ளுகிறது. முஸாதீக்கை விடுதலை செய்யவேண்டுமென்று கோரி, தெஹ்ரானிலிருக்கும் கடைக்காரர்கள் பலர், கடந்தவாரம் கடையடைப்புச் செய்தனராம். அந்தக் கடைகளையெல்லாம், ஆட்சிபுரிவோர், தூள் தூளாக இடித்துத் தள்ளிவிட்டார்கள்—இருந்த இடம் தெரியாமல் ஆக்கிவிட்டார்கள். இவ்விதம் 'முஸாதீக்கை' ஆதரித்து சிறு குரல் எழும்பினாலும், சீறி எழும்புகிறார்கள், ஷாவின் சர்க்கார். அப்படிப்பட்டவர்களையும், சின்னாபின்னப்படுத்துகிறார்கள்.

இந்த அக்கிரமங்களைக் கண்டதாலேயே, கோர்ட்டில், முஸாதீக்—கூவினாராம்:

"என்னைத் தண்டிப்பதன்மூலம், என் தேசீய இயக்கத்தினரைப் பயமுறுத்த நீங்கள் விரும்புகிறீர்கள். எனக்கு என்ன நேர்ந்தாலும், தேசீய இயக்கம், ஒருபோதும் இறக்காது. என்மீது வழக்குத் தொடர்ந்ததன் மூலம், உலகெங்கும் ஈரானுக்கு அவப்பெயர் ஏற்படுத்துகிறீர்கள். உலகம் முழுதும் உங்களை எள்ளி நகையாடும்"

டாக்டர் முஸாதீக், பாரசீகத்தின் சர்வாதிகாரியாக முயன்றார் என்பது, அவர்மீது வீசப்படும் குற்றச்சாட்டுகளுள் ஒன்று.

பாரசீக ஷாவையும், அவர் குடும்பத்தையும் அரசுப் பொறுப்பிலிருந்து 'விரட்ட' அவர் முயன்றார் என்பதே, மேற்படி குற்றச்சாட்டுக்கு ஆதாரமாகும்.

மன்னராதிக்கத்தை ஒழித்து, மக்களாட்சியை மலரச் செய்வதைப் பலர் மேற்கொண்டுவரும் இந்

நாளில், எந்த வகையில் இது குற்றம் என்று தெரியவில்லை.

பாரசீகத்தின் சரிதம், பழம் புகழ் வாய்ந்ததாகும்! இன்று இஸ்லாம், பாரசீகத்தின் மதமாக இருக்கிறது. ஆனால், இஸ்லாம் அங்கு பரவுமுன்—உமர்காலிபா என்பவர் படையெடுத்து 639-ல் வீழ்த்துமுன், அந்த நிலப்பரப்பிலிருந்து வந்த மதமும் பழக்கங்களும் வெவ்வேறானவையாகும். கிரேக்கர்களின் நாகரீகங்களும், எகிப்து பூமியின் கலாச்சார நிழல்களும் அங்கு பிடித்திருந்தன. சிறுசிறு பிரிவுகளாகவும், பாரசீகர்கள் கலைந்து கிடந்தனர். அவர்களையெல்லாம் ஒன்றுபடுத்திய பெருமை, இஸ்லாம் மதத்தையே சாரும். இன்றும் இஸ்லாமியரல்லாதோர் அங்கு இருந்தாலும் மொத்த ஜனத்தொகையில் முக்கால்வாசிப் பேர், முஸ்லீம்கள்தான். 'குர் ஆன்' படித்து, சில சட்ட திட்டங்களை மீறாத எவரும் முஸ்லீமாகக் கருதப்படுவர் என்று, அப்போதிருந்த பாரசீக ஷா—சன்—ஷாக்கள் சலுகைகள் தந்ததால், இவர்களெல்லாம் முஸ்லீம்களாயினர். ஒருபக்கம் மலை! மற்றோர் பக்கம் பாலைவனம்!!—இதற்கிடையில் கிடக்கும் இந்தப் பாரசீகத்தில் மறுமலர்ச்சி முகிழ்க்க அந்தக்கால ஷா—சன்—ஷாக்கள் ஏராளமான முயற்சிகளில் ஈடுபட்டனர். ஆனால், இன்று! அந்த முயற்சிகள், கருகிப்போய்விட்டன. ஆடம்பரமும், கேளிக்கையுமே, வாழ்க்கையாகிவிட்டது. அதிலும், முதலாவது உலகப்போருக்குப் பின் இங்கே நுழைந்த ஆங்கிலேய ஏகாபத்தியத்தின் விளைவாக, மன்னர் பொம்மையாக்கப்பட்டார். 1500—ஆங்கிலேயர்கள், பாரசீகத்தின் வளங்களையும் கைப்பற்றினர். நூற்றுக்கு 55-க்கு மேற்பட்ட எல்லா தொழில்களையும், ஆங்கிலேயர்கள், கைப்பற்றினர்! 'எண்ணெய் பொக்கிஷம்' என்று பாராட்டப்படும் கருன் பள்ளத்தாக்கு முழுமையும் ஆங்கிலேயர் வசம் போயிற்று. இந்த வயிற்றெரிச்சலால், பாரசீகத்தில், தேசிய உணர்ச்சி உருவெடுத்தது. 'அந்நியனை, விரட்டவேண்டும்' என்கிற குரல் உருவெடுத்தது. இதனை, ஷாவும், மதிக்கவேண்டியதாயிற்று. இச்சூழலிலேயே கடந்த இரண்டாண்டுகளுக்கு முன் பாரசீகம், 'ஆங்கிலேயர் சுரண்டலிலிருந்து' விடுபட்டது. இந்த வெற்றியின் பெருமை முழுதும், முஸாதிக்குக்கே சொந்தம் என்றும் கூறப்பட்டது! அந்த முஸாதிக் இன்று அரசால், குற்றவாளிக் கூண்டிலே, நிறுத்தப்பட்டிருக்கிறார்.

அதுகண்டு மக்கள் குமுறுகிறார்கள்—அரசரோ, பேசாமலிருக்கிறார். அவர் ஏன் பேசுவார்? அவருக்கு, இந்த வழக்கு, களிப்பூட்டும் காட்சியாகும்! ஏனெனில் ஆங்கிலேய ஆதிக்கத்தை விரட்டியதோடு நின்றுவிடவில்லை, முஸாதிக். உள்நாட்டில் ஆதிக்கம் செலுத்தும் மன்னர் பரம்பரையையும் ஒழித்துவிட முயன்றார். இதுபோன்ற முயற்சிகளை எதிர்க்கும். 'சர் சி. பி.'க்கள், எப்போதும் எந்நாட்டிலும் இருப்பதுண்டன்றோ. அதுபோல முஸாதீக்கின் முயற்சியை எதிர்க்கும் சிலரும் இருந்தனர். அவர்களின் முயற்சியால், ஓடிய மன்னர் திருப்பியழைக்கப்பட்டு, இன்று வழக்கு நடத்தப்படுகிறது! விசாரணைக்கு வரும்போது முஸாதீக், கண்களில் தனக்குத் துரோகமிழைப்போர் பட்டியல் தென்படுவதால் குமுறுகிறார்! கதறுகிறார்!!

இவ்வண்ணம், நாட்டின் வாழ்வுக்காக நலம்பல புரிந்த ஒருவர், கோர்ட்டுக் கூண்டிலே நிற்கும்போது—பாரசீக ஷாவின் தங்கை பஹ்லேவி என்பார், பாரிஸ்மாநகரிலே, 'பளபளக்கும் வைரங்களைப் பறிகொடுத்துவிட்டேன்' என்று கூறிக்கொண்டிருக்கிறார். இந்த அரசிளங்குமரியை, பாரசீகத்திலிருந்து வெளியேறும்படிச் செய்தவர், முஸாதீக்தான். ஏனெனில், இந்தக் குமரியின் ஆடம்பரவாழ்வு, பலவிபரீதங்களை உண்டாக்கியதால்! அந்தக் குமரி, பாரிஸ்நகரில், அந்நாள் முதல் வசித்து வருகிறார். அவர் வசம் இருந்த ஒருசில நகைகளை, விற்று வருமாறு, தன்னுடைய உயிர்த் தோழர்களிடம் அளித்தாராம்!

அவர்கள் அந்த நகைகளுடன் மறைந்துவிட்டார்கள்!! அது குறித்து, பிரெஞ்சுப் போலீசாரிடம், புகார் செய்துகொண்டிருக்கிறார். அந்த ஒரு சில நகைகளின் விலை என்ன தெரியுமோ? மூன்று பிராங்குகள்! சற்றேறக் குறைய நான்கு லட்ச ரூபாய்கள்!!

'ஒரு சில' நகைகளே, லட்சக் கணக்கான ரூபாய்களுக்கு, ஷாவின் தங்கையிடம் இருந்ததென்றால், அரசரிடம் இருக்கும் ஆடம்பரப் பொருள்களின் வகைகளை, யாரே, அறிய முடியும்?

இவ்வளவு ஆடம்பரங்களோடு, மக்களின் வரிப்பணத்தில் வாழும் மன்னராட்சியைத்தான், முஸாதிக் அகற்ற நினைந்தார்.

ஆனால், தேசியத் துரோகிகளால், சிறைக் கம்பிகளுக்குள் பூட்டப்பட்டுக் கிடக்கிறார்.

அவரை வெளியே விட்டால், ராஜ்யம், போய்விடும்! — என, ஷா அஞ்சுகிறார்.

ஆகவேதான், வழக்கு, நடைபெறுகிறது.

'தன்னை, எப்படியும், வெளியே விடமாட்டார்கள்!', என்பதை முஸாதீக் அறிந்து கொண்டதாலேயே, வீரக்குரல் தருகிறார். "என்னை அழித்துவிடலாம். ஆனால் என் இயக்கத்தை உங்களால், எதுவும் செய்ய முடியாது." என்று வீர முழக்கமிடுகிறார்.

'சில' நகைகளை மட்டும் நான்கு லட்சம் ரூபாய்க்கு வைத்திருக்கும் அரச பரம்பரையின் மீது, ஏழைகளின் கவனம், எத்தனை நாளைக்குப் பதியாமலிருக்கும்? வாழத் துடிப்பவன் மனதில், வைரங்கள் ஜொலிக்கும் சிம்மாசனம் தென்பட்டால், ஆபத்து அதிகமாகுமேயன்றி, தென்றலா, வீசும்? தீ, தானே, பரவும்! இதனை, நன்றாக உணர்கிறார்—முஸாதீக். அதனால்தான், உறுதியோடு, கூறுகிறார், 'என்னை அழிக்கலாம்—என் இயக்கத்தை அழிக்க முடியாதென்று!!

காஞ்சியில்

பாராட்டுக் கூட்டம்

பிள்ளையார் பாளையம் திருவேகம்பன் தெருவில், 22–11–53 ஞாயிறு மாலை 6-மணிக்கு,

சி. வி. எம். அண்ணாமலை தலைமையில்

அருண்மொழி B. O. L.
பூங்கோதை ஆகியோர்
சிறைசென்று மீண்ட தோழர்களை பாராட்டிப் பேசுவர்.

வேலாயுதம் படிப்பகம்
(தி. மு. க. கிளை)

பொருந்தா வாதம் பொருளற்ற பேச்சு

"படிக்காதவர்களையெல்லாம் படிக்க வைக்க வேண்டும் என்பதற்காகவே நான் புதிய கல்வித் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறேன். ஆனால், என்ன காரணமோ தெரியவில்லை படிக்காதவர்களெல்லாம்தான் என்னுடைய திட்டத்தை எதிர்க்கிறார்கள்" என்பதாக சென்னை முதல்வர் ஆச்சாரியார், அவர் போகும் இடங்கள் தோறும் சென்ற சிலதினங்களாகப் பேசி வருகிறார். தன்னுடைய திட்டம் நியாயமானதுதான் என்பதை விளக்க அமைச்சர் ஆச்சாரியார் கண்டுபிடித்திருக்கிற கடைசிவாதம் இது. இந்த வாதத்தையும் சற்று அலசி ஆராய்ந்து பார்த்தால், புதிய திட்டத்திற்கு ஆதரவாக அவர் இதுவரை எழுப்பி வந்திருக்கிற ஏனைய எல்லா வாதங்களைப்போலவே இந்த வாதமும் அறிவுக்குப்பொருந்தாத பொருளற்ற பேச்சு என்பது வெள்ளிடை மலையென விளங்கும்.

படிக்காதவர்கள்தான் இந்தத் திட்டத்தை எதிர்க்கிறார்கள்—படிக்காதவர்களோ கல்வித்திட்டத்தைப் பற்றிய தீர்ப்புக் கூறும் உரிமை இல்லாதவர்கள்—ஆகவே இந்தத் திட்டத்தை எதிர்ப்பவர்கள் இதைப் பற்றிப் பேசவே உரிமை அற்றவர்கள்—எனவே அவர்களுடைய எதிர்ப்பை நாம் பொருட்படுத்தத் தேவையில்லை என்கிற கருத்து ஆச்சாரியார் அவர்களுடைய புதிய வாதத்தில் பொதிந்து கிடக்கிறது. ஆனால் ஆயிரமாயிரம் ஆரம்ப ஆசிரியர்கள் சார்பில் அன்புமிக்க ஆச்சாரியார் அவர்களை நாம் மிகப் பணிவுடன் கேட்க விழைகிறோம், படிக்காதவர்கள்தான் இத் திட்டத்தை எதிர்க்கிறார்கள் என்று அவர் கூறுகிறாரே, இது உண்மைதானா?

கல்வித் துறையில் தலைசிறந்த நிபுணரும், தென்னிந்தியப் பேரறிஞர்களில் தனிச் சிறப்புப் பெற்றவரும், மருத்துவக் கல்லூரியின் முதல்வராக இருந்தவருமாகிய டாக்டர் இலட்சுமணசாமி முதலியார் இந்தத் திட்டத்தைக் கடுமையாக எதிர்க்கிறார். அவர் படிக்காதவரா? அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராக இருந்தவரும் தமிழ் இலக்கிய உலகில் தன்னிகரற்று விளங்குபவருமாகிய முதுபெரும் புலவர் பேராசிரியர் சோமசுந்தர பாரதியார் இந்தத் திட்டம் கலைக்குதவாதது என்பதை எழில்பட எடுத்துக் காட்டியிருக்கிறார். அவர் படிக்காதவரா? நூற்றுக்கு மேற்பட்ட புத்தகங்கள் எழுதி ஆயிரக்கணக்கான பொதுக் கூட்டங்களில் உரையாற்றி, வாலிப உலகின் வசீகர கீதமாக விளங்கி கற்றறிந்த பெருமக்களால் அறிஞர் என்று அன்புடன் அழைக்கப்படுகிற, திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் தோழர் அண்ணாதுரை இந்தத் திட்டத்தை எதிர்த்துத் தீவிரமான அறப் போராட்டத்தைத் தொடங்கினார். அவரும் படிக்காதவர்தானா? மங்களூரில் மூன்று மாதங்களுக்கு முன்னால் கூடிய சென்னை மாநில ஆசிரியர்கள் மாநாடு இந்தத் திட்டத்தை முழு மூச்சுடன் எதிர்த்துத் திட்டவட்டமான அளவில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. அந்த மாநாட்டில் கலந்துகொண்டு கண்டனத் தீர்மானத்தை நிறைவேற்றிவைத்த அந்த ஆயிரக்கணக்கான ஆசிரியர் பெருமக்கள் அத்தனைபேரும் ஆச்சாரியார் கருத்துப்படி படிக்காதவர்களா? இமயம், பேரிகை, புதுமை, மன்றம், தீப்பொறி, திராவிடன், போர்வாள், திராவிடநாடு, ஆரம்பக்கல்வி, ஹிந்து மெயில் — இத்தனை இதழ்களும் புதிய திட்டம் பொருந்தாத் திட்டம் என்பதை அழுத்தந் திருத்தமாக எடுத்துக் காட்டியிருக்கின்றன. இவற்றின் ஆசிரியர்கள் அத்தனை பேரும் படிக்காதவர்கள் என்பது ஆச்சாரியாரின் கருத்தா?

ஆயிரக்கணக்கான ஆரம்ப ஆசிரியர்கள், கல்வி உலகின் தலையாய நிபுணர்கள், தமிழ்த் துறைக் கல்வியில் இணையற்ற புலமை படைத்தவர்கள், கல்லூரித் தலைவர்கள், ஏடுகள் நடத்தும் எழில் மிக உடையோர், நூல்கள் பல தீட்டிய நுண்ணறிவாளர்கள் — இப்படிப்பட்டவர்களெல்லாம் புதிய திட்டத்தை எதிர்த்துத் தங்களுடைய எழுச்சிக் குரலை எழுப்பியிருக்கும்போது, படிக்காதவர்கள்தான் இத்திட்டத்தை எதிர்க்கிறார்கள் என்று கூறுவது பொருளற்ற பேச்சாகுமேயன்றி, நல்லறிவாளர்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய எழிலுரையாக எங்ஙனம் ஆகும்? இனியேனும் மதிப்பிற்குரிய கனம் ஆச்சாரியார் அவர்கள் இப்படிப்பட்ட பொருந்தா வாதங்களையும் பொருளற்ற பேச்சுக்களையும் எழுப்பாமல் இருப்பார் என்று நம்புகிறோம்.

[ஆரம்பக் கல்வி]

வருந்துகிறோம்

லால்குடி தோழர் மூ. சி. விருத்தாசலம் அவர்கள் 15-ந் தேதி இரவு காலமான செய்தி அறிய மிகவும் வருந்துகிறோம். அவர், 'நம் நாடு' பொறுப்பாளர் தோழர் அ. பொன்னம்பலனாரின் சிறிய தாயார் மகன், ஆவார். கடந்த லால்குடி மாநாட்டின்போது, தலைவர்களையும் தொண்டர்களையும் வரவேற்று அவர் உபசரித்த வகையினை எண்ணும்போது, நமக்குப் பேரதிர்ச்சி ஏற்படுகிறது. அத்தகைய ஒருவரின் மறைவு கேட்டு, மிகமிக வருந்துகிறோம். தம்பியை இழந்த தோழர் பொன்னம்பலனார் அவர்கட்கும், அவரது குடும்பத்தாருக்கும் நம்முடைய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

*

பட்டிவீரன்பட்டி பாண்டியனார் மறைவு குறித்த சோகம் தீருவதற்கு முன்பே, மற்றோர் துயரச் செய்தி, கிடைத்திருக்கிறது. மறைந்த பாண்டியனார் துணைவியார் திருமதி பாலாம்மாள் அம்மையார் அவர்கள், கடந்த வாரம், இயற்கையெய்தியதாக அறிகிறோம். இது, பாண்டியனாரின் புதல்வர்களுக்கும், குடும்பத்தாருக்கும் மிக மிக அதிர்ச்சியைத் தரக்கூடிய நிகழ்ச்சியாகும். இத்தகைய துயரத்துக்கு ஆளான பாண்டியனாரின் குடும்பத்தாருக்கு நம்முடைய ஆழ்ந்த அனுதாபங்களையும் ஆறுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

வாழ்த்தும் வணக்கமும்

தாயகத்தின் விடுதலைக்காக, மழலையின் மொழியையும் மனைவியின் காதலையும் மறந்து, பெற்றோரிடம் விடைபெற்ற வண்ணம், அறப்போரில் ஈடுபட்டு, ஆளவந்தாரின் வெறியாட்டத்துக்கு இரையாகி, சிறைச்சாலைக்குள்ளே கிடக்கும், தாயகத்தின் கண்மணிகளாம் நம்முடைய சகோதரர்களுக்கு, நம்முடைய வாழ்த்துதல்களையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். வாழ்க, வீரர்கள்! ஒழிக அடக்குமுறை!!

திராவிடநாடு

காஞ்சி] 22—11—53 [ஞாயிறு

நமது நிலை

★

21-ந்தேதியன்று திருச்சி சிறைக் கதவுகள், திறக்கப்படப் போகின்றன! செயல் வீரர் கருணாநிதியும் அவருடனிருக்கும் முல்லை—சத்தி, கஸ்தூரிராஜ், குழந்தைவேலு, குமரவேல் ஆகிய தோழர்களும், நம்மையும் நாட்டையும் காணப்போகிறார்கள்!!

ஜூலை 15-க்குப்பின், நாம், தோழர் கருணாநிதியைக் காணப் போகிறோம். அவரது இல்லத்தில், தாயும் தாரமும், குழந்தைகளும், எந்தளவு ஆனந்தமாகக் கருதுமோ, இச்செய்தியை—அதே அளவுக்கு, திராவிடமும் கருதும்!

கல்லக்குடி அறப்போராட்டக் குழுவின் தலைவர், அவர். அன்று போராட்ட ஆரம்ப நாளில், அவர் ஒட்டிவிட்டுப்போன 'கல்லக்குடி' எனும் தமிழ் எழுத்துக்கள், இன்னும் ஆட்சியாளரால், எடுக்கப்படவில்லை 'டால்மியாபுரம்' இல்லை, இப்போது! கல்லக்குடியே, காட்சி அளிக்கிறது! இதனைக் காணும் போது நண்பரின் உள்ளம், ஓரளவு மகிழ்ச்சியடையுமென நம்புகிறோம். சிறையின் கொடுமைகளிலிருந்து திரும்பும், அவர், கோரகப் பூந்தோட்டத்துக்குள் நுழையப்போவதில்லை. சிறிய சிறையினைவிட்டு பெரிய சிறைக்குத்தான் வரப்போகிறார்!! இங்கே, அவருக்கு, காத்திருக்கும் பொறுப்புகள், ஏராளம். அதனைச் சிறையினின்று திரும்பிய நமது ஆயிரமாயிரம் தோழர்கள், அறிவார்கள். அறப்போரில் ஈடுபட்டு, ஆட்சியின் கொடுக்கு கொட்டிய போதும் சரி—சிறையிலிருந்து மீண்டு திரும்பியபோதும் சரி, நமது வீரர்களின கண்களில, வீரத்தையும் உறுதியையுமே, கண்டோம்! திருச்சி சிறையைப் பொறுத்தவரையில் நண்பர் கருணாநிதியும் தோழர்களுமே, 'கடைசி விருந்தினர்'களாவார்கள். ஆனால், இன்னும் சில நாட்களில், மீண்டும், அது திறந்த மூட நேரலாம்! நண்பர்கள் கண்ணதாசன் அம்பில் தர்மலிங்கம் முதலிய தோழர்கள்மீது நடைபெற்று வரும் வழக்கு, முடியும் கட்டம் நெருங்கிவிட்டது.

அறப்போர் துவக்கப்பட்டு, அதன் காரணமாக தண்டனைகள் ஏற்று ஒவ்வோர் ஜெயிலிலிருந்தும் நம்முடைய தோழர்கள், வெளி வந்தபோது, நமது உள்ளம் 'அவர் எப்போது வருவார்! இவர் இன்னும் வரவில்லையே!' என்றே ஏங்குவதுண்டு. இன்று கருணாநிதியும் தோழர்களும், வருகிறார்கள். ஓரளவு மகிழ்ச்சி மலர்கிறது நமக்கு. ஆனால் அதே நேரத்தில் 'வா, கருணாநிதி!' என்றழைக்கவேண்டிய பொதுச் செயலாளரும் ஏனைய தோழர்களும் வெளியிலில்லையே எனும் வருத்தமும், நம்மைத் துளைக்காமலில்லை. பொதுச் செயலாளரும், மதியழகனும், சம்பத்தும், நெடுஞ்செழியனும், நடராசனும், சென்னைச் சிறையிலே கிடக்கிறார்கள். தூத்துக்குடி தோழர்களாம் சிவசாமி, தங்கப்பழம், கே. வி. கே. சாமி, நடராசன் முதலியோர் நெல்லைச் சிறையிலே, கிடக்கின்றனர். இன்னும் ஆங்காங்குள்ள சிறைகளிலும் பல தோழர்கள் கிடக்கிறார்கள். அவர்களனைவரும், விடுதலை பெற்று வெளியில் வரவேண்டும். அன்றுதான் நம் உள்ளம் மகிழும்! ஓரளவாவது குதூகலம் ஏற்படும்!!

இந்தத் திங்கள் 30-ந்தேதி பொதுச் செயலாளர், சம்பத், நெடுஞ்செழியன், நடராசன் ஆகிய நால்வரும் — மதியழகன் டிசம்பர் 11-ந்தேதி வாக்கில் வரலாம்—வெளி வரலாமென எதிர்பார்க்கிறோம். அதனை, உறுதியோடு கூறமுடியவில்லை—நம்மால். ஊராரும் பாக்கியம் பெற்ற ஆச்சாரியாரின் சேட்டைகள், இன்னும் முடியவில்லை. கோர உருவெடுத்துக்கொண்டே போகிறது.

இங்கிலையில், எத்திக்கு நோக்கினும், 'மலை மலை'யாகப் பொறுப்புகள் காத்துக்கொண்டிருக்கின்றன.

அதோ! தூத்துக்குடிச் சிறையில் கிடக்கும் தோழர்கள், 'என்ன நேருமோ? யாது உண்டாகுமோ?' என்று தெரியாது கிடக்கிறார்கள். அவர்கள்மீது, ஆச்சாரியார் சர்க்கார் சுமத்தியிருக்கும், குற்றச்சாட்டுகள் கொஞ்சநஞ்சமல்ல.

அத்தனை 'ஆபத்து'களிலிருந்தும் அவர்களைக் காப்பாற்றியாக வேண்டும் — நாம். அந்தப் பணியில் ஈடுபட்டிருக்கும்போதே, 'ஐவர்' மீதும், 'அப்பீல்' வழக்குத்தொடுத்திருக்கிறார் ஆச்சாரியார். அதனையும் ஏற்று நடத்தவேண்டிய நிலையிலிருக்கிறோம். இங்ஙனம், ஒருபக்கம் மகிழ்வு! மற்றோர் பக்கம் தொல்லைகள்!!—இந்த இக்கட்டான நேரத்தில் கழகத்தைக் கட்டிக் காக்க வேண்டும் நாம். அடக்குமுறை அம்புகள் வீசப்படுவதும் அதனை அரசியல் கட்சிகள் தாங்கிக்கொள்வதும் சகஜம்தான். ஆனால் ஆச்சாரியார், அடக்குமுறையை வீசுவதோடு இருக்க விரும்பவில்லை — நம்மை அழித்துவிடவே கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்! அதற்கான யோசனைகளிலும், ஆழ்ந்திருக்கிறார். அவரோடு சேர்ந்து 'இந்த ஆனந்தத்தை' ரசிக்க திட்டமிட்டுக் கொண்டிருக்கும் கெடுமதியாளர்களுமிருக்கிறார்கள். அவர்களின் சுயநல ஆசைகளைத் தூள் தூளாக்க வேண்டும் நாம்.

திராவிட முன்னேற்றக் கழகம் பிறந்த நாள் முதல், வேதனைகளைத் தாங்கியபடியே வளர்ந்து வருகிறது. அதிலும், கொஞ்சநஞ்சமல்ல, நமக்கேற்படும் தொல்லைகள்! அனைத்தையும் தாண்டி, நாடு நகரெங்கும் கிளைக் கழகங்கள் கண்டு, லட்சத்துக்கு மேற்பட்ட உறுப்பினர்களையும் சேர்த்து, நாட்டுக்கான நன்மைகளையும் செய்து, நற்பணியாற்றி வருகிறோம்,

இந்த நற்பணி—வீண்போகாது. எதிர்க்கும் எதிரியை, தாக்கி வெற்றி பெறுவதைவிட, அவன், ஏன் எதிர்க்கிறான் என்பதை அறிந்து, செயல் மூலம் நம் பதிலைக் காட்டவேண்டும்.

அப்போதுதான், கொள்கையின் உரத்தை, அக்குறுமதியாளர்கள் உணர முடியும்.

இந்த' இலட்சியப் பாதையில்' நிமிர்ந்த நெஞ்சுடன் நடைபோடும். கழகக் காளையர்கள் சார்பில், விடுதலையாகும் தோழர்களை, வரவேற்கிறோம்! வாழ்க செயல் வீரர்கள்!

'ரிப்பேர்' விழா!

"ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் கவிச்சக்கரவர்த்தி கம்பர் தாம் இயற்றிய ராமாயண மகா காவியத்தை ஸ்ரீரங்கத்தில் திருவரங்கர் சன்னதியில் நிறைவேற்றினர்:

நிகழும் விஜயவருடத்தில் ரசிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள், "கம்பர் தரும் ராமாயண"த்தைக் குற்றாலநாதர்சன்னதியில் ராஜாஜி அவர்கள் தலைமையில் நிறைவேற்றினர்" — என்று பூரிப்போடு கல்கி இதழ்; தெரிவிக்கிறது.

கம்பராமாயணத்தில் இடை இடையே 'யாரரோ' எழுதிய பாட்டுகள் புகுந்துவிட்டதாகவும், அவைகளை அகற்றி, கம்பராமாயணத்தை டி. கே. சி. சுத்தப்படுத்தியிருப்பதாகவு எல்லோரும் கூறுகின்றனர்.

"இடைச் செருகல்களை நீக்கி," கம்பரின் உண்மை ராமாயணத்தை மக்களுக்கு வழங்குகிறாராம், இவர்.

இந்த 'இடைச் செருகல்'களை, கண்டு பிடிக்கும் அவசியம், என்ன? —என்பது, வேறு விஷயம்.

கம்பரின் ராமாயணத்தை, தமிழர்கள் தம்முடைய கண்டனத்துக்குரியதாகக் கருதத் தொடங்கியதும் அதை 'ரிப்பேர்' செய்ய ஆரம்பித்தனர். இவர்கள்.

'ரிப்பேர் செய்தாகிவிட்டது!"— என்று டி. கே. சி. வெளியிடுகிறார். அதன் விழா, அண்மையில், குற்றாலத்தில் நடைபெற்றதைத்தான், கல்கி, மேற்கண்டவாறு தீட்டுகிறது.

தமிழ்த் தோட்டத்துக்குள், டி. கே. சி.யின் நூலொன்று, வருவதைப்பற்றி, நமக்கு ஆட்சேபனையில்லை. அதைப் படித்து தீர்ப்பு வழங்க வேண்டியது, அறிஞர்கள் கடமை.

ஆனால், 'ரிப்பேர்' செய்து ஒரு நூலைத் தருகிறார், டி. கே. சி. இந்த 'ரிப்பேர்' விழாவை, மிகப் பெரிய திருவிழாவெனக் கொண்டாடுகிறது 'கல்கி' கும்பல்

'ரிப்பேர்' வேலையை அவர்கள் கருதுவது போல, எவரெஸ்ட் சிகரத்தை எட்டிப்பிடித்த வேலையாகவே கருதுவோம். ஆனால், அந்த 'ரிப்பேரை'க் காட்டி. 'சரிதானா?', என்று யாரைக் கேட்பது?

கொள்ளைக் கண்ணர்களைக் கூட்டி வைத்துக்கொண்டு, ரவிவர்மா ஓவியத்துக்கு மதிப்புரை பெற முயல்வது நல்லதோர் நகைப்புக்குரிய காட்சிதானே? கம்பராமாயணத்தை 'ரிப்பேர்' செய்த டி. கே. சி.யின் விழாவில், யார் கலந்துகொள்ள வேண்டுமோ, அவர்கள் இல்லை! டி. கே. சி. செய்த காரியம், தமிழ் சம்பந்தப்பட்ட விஷயமாகும். 'ரசனை சொட்டுகிறதென்று' புலவர்கள் வியந்துரைக்கும் கம்பராமாயணத்தில் கை வைத்து, மாற்றங்களைச் செய்திருக்கிறார். டி. கே. சி! அந்த மாற்றங்களை யாரிடம் காட்டுவது? பெரியதோர் காரியம் அரங்கேற்றப்படுவதென்றால், மொழி வல்லுநர்களைக்கூட்டி, அவர்கள் முன் படித்துக்காட்டி அதன் அங்கீகாரம் பெறுவதே — பண்பாடு, முறை ஆனால், இந்த 'ரிப்பேர்ஷாப்புக்காரருக்கு' தமிழ் அறிஞர்களைக் கூப்பிடும் எண்ணம் வரவில்லை. எங்கே தன்னுடைய, 'கம்பர் தரும் ராமாயணத்தில்,' குற்றங்களைக் கண்டுபிடித்துவிடுவார்களோ எனும் பயம்போலும்!

டி. கே. சி. யின் 'ரிப்பேர் விழாவில்' கலந்துகொண்டவர்கள், யார் தெரியுமா? தமிழைக் 'கொலை' செய்யும் ஆச்சாரியார், 'அம்மாமி பாஷையை வளர்க்கும் ஆனந்த விகடன்—கல்கி அதிபர்கள், எதற்கெடுத்தாலும் 'துந்துபி' பாடும் சில பணக்காரர்கள்! இவர்களைத் தவிர, யாரும் 'ரிப்பேர் விழா'வில் கலந்துகொள்ளவில்லை.

செய்யப்படும் சீர்திருத்தம், தமிழ் நூலில்! ஆனால், அந்த விழாவில், தமிழறிஞர்கள் இல்லை—நாவலர் பாரதியார் இல்லை — பேராசிரியர்களாக இருக்கும் எ. சிதம்பரநாதனார் கிடையாது—கம்பரின் காவியத்தை வசனநடையில் அள்ளித் தரும் சேதுப்பிள்ளை செல்லவில்லை— தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அழைக்கப்படவில்லை—மு. வரதராசனாருக்கு, இடமில்லை, அங்கே — தமிழ்ப்பெரும்புலவர்களாம் ஔவை துரைசாமி, வெள்ளைவாரணனார் போன்ற அறிஞர்கள் ஏராளம், தமிழகத்தில்! ஆனால், அவர்கள் யாரும் அழைக்கப்படவில்லை, அங்கு. 'டி. கே. சியிடம் தான் தமிழைக்கற்றுக் கொண்டேன்!".என்போரும், "தமிழின் அருமையை அவர் கூறியதாலேயே உணர்ந்தேன்." என்றுரைக்கும் விவேகசிந்தாமணிகளும், அங்கேசென்று, வாழ்த்தி வந்திருக்கிறார்கள். அதோடு, சில பணக்காரர்களும் சென்று வந்திருக்கிறார்கள்.

செய்யப்பட்டகாரியம், தமிழ் சம்பந்தமானது — அதுவும் 'ரிப்பேர்' செய்யும் விழா. அங்கே தமிழ்ப்புலவர்கள் இல்லை! யாரோ இருந்திருக்கிறார்கள்!! இதுதானா. தமிழைக்காக்கும், வழியாம்—தமிழ் வளரப் பாடுபடும் செயலாம்.

விடுதலை வீரர்
மு. கருணாநிதி
தரும்
புதிய நூல்கள்
விரைவில் வெளிவரும்!
திராவிடப் பண்ணை
தெப்பக்குளம், திருச்சி.

★ முத்துச்சரத்தில்! ★

"எனக்கு இன்னொரு சந்தர்ப்பம் அளியுங்கள்; நீங்கள் விரும்பும் திட்டங்களையெல்லாம் நிறைவேற்றுகிறேன்."

"அவரைத் தேர்ந்தெடுக்காதீர்கள். உங்களுடைய சுயமரியாதை, கௌரவம் எல்லாம் எங்கே? இதை பறித்தவர்களுக்கா, மீண்டும் ஓட்டுப் போடப் போகிறீர்கள்?"

*

தனக்கு இன்னொரு சந்தர்ப்பமளித்தால், செய்யத் தவறியதையெல்லாம், செய்து முடிப்பதாக ஒரு அபேட்சகர், மக்களைப்பார்த்து வேண்டிக்கொண்டார். அவரை எதிர்த்த அபேட்சகரோ, அவர் ஆட்சியில் நடைபெற்ற அக்கிரமங்களையெல்லாம், எடுத்துச் சொல்லி அவரைத் தேர்ந்தெடுக்காதீர்கள் என்று தேர்தல் பிரச்சாரம் செய்தார்.

*

"என்னுடைய வயதைப் பாருங்கள். தள்ளாத கிழவன், நான். 62 ஆகிவிட்டது. அவருக்கென்ன வயது 46 தானே. அவரை நீங்கள் தேர்ந்தெடுப்பது ஆபத்து"

இவ்விதம் முதல்வர் ஆரம்பித்தார். தன்னுடைய வயோதிகத் தன்மையைக் காட்டி, மக்களின் ஆதரவைப்பெற முயன்றார். இதற்கு அவர் எதிரி இப்படி பதிலளித்தார்:

"எனக்கு வயது போதாதென்று சொல்லுகிறார்கள். கம்யூனிஸ்டுகளின் அட்டகாசங்களை அடக்கும் போதுமட்டும் இவர் என்னை அழைத்தாரே? அப்போது என் வயதையா கேட்டார்!"

"செச்சே! அவன் ஒரு லாரிடிரைவராக இருந்தவன்!" இது, முதல்வர், பிறகு வீசிய கண்டனம்.

"ஆமாம்! லாரி டிரைவராகயிருந்தவன்தான். அதனாலென்ன? இது, எனக்கு அவமானமல்ல. நம் நாட்டிலிருக்கும் 190லட்சம் ஏழைமக்களை அவமதிப்பதாகும்." — இவ்விதம் எதிர்த்தவர் பதிலளித்தார்.

*

"நான் மக்களுக்கு சுதந்திரம் வாங்கித் தருவதற்காக இருப்பவன். என்னைத் தேர்ந்தெடுக்காவிட்டால், வெளிநாட்டான் புகுந்துவிடுவான். இந்த ஆபத்திலிருந்து மீள, என்னையே தேர்ந்தெடுங்கள்"

ஆமாம்! சுதந்திரத்துக்குப் போராடும் சூரப்புலியோ, இவர்? வெட்கமில்லாமல் சொல்கிறாரே! 1951ல் கொலை செய்யப்பட்டாரே பாடில்லா—அரசியல் வாதி. அவரை ஏன் கொலை செய்தார்கள்? நிர்வாகத்தை நடத்தியவர்களுக்கு எதிராகப் பிரசங்கங்கள் செய்தாரென்பதால்தானே. அவரை இந்தப் பாபிகள் எப்படிக் கொலை செய்தார்கள். ஐயோ! அவர் கால்களை முறித்தார்கள்; கண்களைப் பிடுங்கி எடுத்தார்கள்; நாக்கை வெட்டினார்கள். பிறகு பின்னாலிருந்து, ஐந்து தடவைச் சுட்டுக்கொன்றார்கள். அவருடைய சடலத்தை நான் தூக்கிவந்தேன். ஆனால் அது பாடில்லாவின் சவமா? அல்ல! அல்ல!! இந்த நாட்டு மக்களின் உடல்!!

*

கடந்த நான்கு மாதங்களாக, நாடு முழுமையும் அல்லோலப்பட்டது — எங்கு பார்த்தாலும் தேர்தல் பிரசாரங்கள்—பொதுக் கூட்டங்கள்—இவர் அவரைத்தாக்கினார்—அவர் இவரைத் தாக்கினார்—இவ்விதம் புயல் வீசிக்கொண்டிருந்த பிலிப்பைன்ஸ் தீவிலே, அண்மையில், தேர்தல் நடந்து முடிந்துவிட்டது. குடியரசுத் தலைவர், பதவிக்கே இந்தத் தேர்தல். முன்பு தலைவராக இருந்த குரினோ என்பவரும், அவர் மந்திரிசபையில் அங்கம் வகித்த மேக்ஸாஸே என்பாரும் போட்டியிட்டனர்.

குரினோ, வயதைக் காட்டினார்! மெக்ஸாஸே, வயதல்லவேண்டியது என்றார்!!

குரினோ, இவரது ஏழ்மையைச் சுட்டிக் காட்டினார்! அது தான், நான் தலைவராக வருவதற்குள்ள தகுதி என்றார்!!

கடைசியில் 50-லட்சம் வாக்காளர்களும், மிதவாதக் கட்சியைச் சேர்ந்த குரினோவைத்தோற்கடித்துவிட்டு, தேசியக் கட்சியைச் சேர்ந்த, மெக்ஸாஸே என்பவரை வெற்றி பெறச் செய்தனர்.

*

இந்தோசீனத்துக்குக் கிழக்கே, சமுத்திர அலைகளில் மிதக்கும் முத்துச் சரம்போல, கிடப்பது தான் பிலிப்பைன்ஸ். மொத்தம் 7083-தீவுகளைக் கொண்டது; இது. இந்தத் தீவுகள் ஒவ்வொன்றும், ஒன்றையொன்று தொடர்ந்தாற்போல் இருக்கின்றன. இவைகளில் 2441-தீவுகளுக்கே பெயரிடப்பட்டிருக்கிறது. பெயர் எதுவும்வைக்கப்படாமல் 4642-தீவுகளிருக்கின்றன. இவைகளில், லூஸான், மீண்டானு எனும் 11-பெரிய தீவுகளே முக்கியமானவை. இங்கே, 190-லட்சம் மக்கள் வாழ்கிறார்கள். இவர்களில் சுமார் 160-லட்சம்பேர், மலாய் இனத்தைச் சேர்ந்தவர்கள்—இவர்கள்தான், இந்நாட்டின் சுதேசிகள். இவர்களில் பெரும்பாலோர், கிருஸ்துவ மதத்தைத் தழுவியவர்கள். இலட்சத்துக்கு மேற்பட்ட சீனர்களும், அரைலட்சத்துக் குட்பட்ட ஜப்பானியர்களும், பதினாயிரம் அமெரிக்கர்களும், இங்கே வாழ்கிறார்கள். இதன், தலைநகர், மணிலா. இங்குதான், மேற்கண்ட குடியரசுத் தேர்தல், இவ்வளவு கோலாகலத்துடன் நடைபெற்றது!

கடலலைகள் தாலாட்ட, தென்னையும் கரும்புத் தோட்டமும் கண்ணைக் கவர, தங்கச் சுரங்கங்களும் மரக் காடுகளும் நிறைந்து விளங்க, முத்துக் கோர்த்தாற்போல் விளங்கும் இந்தத் தீவுகளை, முதலில், கண்டுபிடித்தவர்கள், போர்த்துகீசிய மக்கள். 1521-ல்தான், இத்தீவுகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவர்கள் வசமிருந்த இவைகளை, 1565-ல் ஸ்பெயின் தேசத்தார், கைப்பற்றி அடக்கி ஆண்டுவந்தனர். பிறகு, இது, அமெரிக்கர் வசம் வந்தது. 1898-ல், ஸ்பானியரை விரட்டிவிட்டு, அமெரிக்கர்கள் இதனைத் தம் வசமாக்கினர். அமெரிக்கர் வசமிருந்த இத்தீவுகள், கடந்த உலகப் போரின்போது, ஜப்பானியரால் பிடிக்கப்பட்டது! மூன்று ஆண்டுகாலம் ஜப்பானியரின் பிடியில் சிக்கிக்கிடந்தது!! இவ்விதம், அந்நியரின் வசமாகிச் சீரழிந்த இந்தப் பூமி 1944-இறுதியில், ஜப்பானியரிடமிருந்து மீட்கப்பட்டு, அமெரிக்கர்வசம் போயிற்று.

அமெரிக்கர் பிடியிலும் வாழ விரும்பாத மக்கள், தமக்கு சுதந்திரம் வேண்டுமென முழக்க ஆரம்பித்தனர். இதன் விளைவாக, 1946-ல இத்தீவு, சுதந்திரம் பெற்றது! குடியரசு நாடாக ஆகியது!! எனினும், இந்தியாவைப் போன்றே, அங்கும் 'அதிகார மாற்றம்' மட்டும் நடைபெற்றதேயொழிய, இன்னும் அமெரிக்கர் சொன்னபடிதான், ஆடிவருகிறது. அங்கு, இப்போது, நடைபெற்ற தேர்தலிலும், அமெரிக்கர்களின் ராஜதந்திரம்தான், வெற்றி பெறச் செய்திருக்கிறது.

போட்டியிட்ட, குரினோ—மெக்ஸாஸே இருவரையும்,முற்போக்குத் தராசில் வைத்து நிறுக்க விரும்பவில்லை—நாம்.

ஆனால், அவர்களிருவரும், தத்தமது தேர்தலில் கையாண்ட தேர்தல் பிரச்சாரத்தையே, உற்று நோக்க விரும்புகிறோம்.

குரினோ, தான் முன்பு எவ்வளவு அக்கிரமங்கள் செய்தாலும், மன்னித்து, மறுமுறையும் தேர்ந்தெடுக்குமாறு வேண்டினார்! ஆனால் வெற்றிபெற்றது, மெக்ஸாஸே ஒழிய, அவரல்ல!

இதனால் விளங்கும் பாடத்தை, இங்குள்ளவர்களுக்குச் சமர்ப்பிக்கவே விரும்புகிறோம். அதிலும், நம்மை யாளும், காங்கிரஸ் மந்திரிகளுக்கு, இது, மிக மிகத் தேவையான பாடமாகும்.

மக்கள் மனதை மெழுகென நினைத்து, நேற்று செய்த கொடுமைகளை மறந்துவிடுமாறு செப்பி, அவர்களின் ஆதரவைப் பெற முயல்வது, என்றும் முடியாததாகும். ஒருமுறை, ஒரு ஆட்சியில், நைந்து மெலிந்த மக்கள், மீண்டும் அந்த ஆட்சியைத் தேர்ந்தெடுக்க, ஒருபோதும் சம்மதிக்கமாட்டார்கள். இந்த உள்ள மனப்பான்மை, பிலிப்பைனில்மட்டுமல்ல--இந்தியாவிலும் கண்டிருக்கிறோம். இதனாலேயே, பிலிப்பைன் மக்கள், குரினோவின் தகுதி, திறமை, எதையும் கவனிக்காமல், தீர்ப்பு வழங்கியிருக்கின்றனர்.

அதுமட்டுமின்றி, தங்களுடைய குண விசேஷங்களாக, வயோதிகத் தன்மையையும், கோடீஸ்வரப் பெருமையையும் கூறிக்கொள்வதும் வெற்றியளிக்கமுடியாது.

மக்கள், மயதையும் வசிகரத்தையுமல்ல, 'ஸ்தேலாக' வைத்திருப்பது.

"அவன் ஆட்சி அவ்வளவு அக்கிரமம் செய்தது! இவன் ஆட்சியில் ஏதாவது நன்மைகள் உண்டாகுமா"

"அவன் பணக்காரனாக இருந்ததாலேயே, ஏழைகளின் மனத்துயரம் அறிந்து நடக்கவில்லை. இப்போது, ஏழை பங்காளனெனச் சொல்லும் இவனையாவது தேர்ந்தெடுப்போம். இவன் ஏதாவது செய்கிறானா என்று பார்ப்போம்!"

"அவன் ஆட்சியில், எதிர்த்துப் பேசியோரைப் பட்டப்பகலில் சுட்டுத் தள்ளினானே! ஐயோ, அவனைத் தேர்ந்தெடுத்தால், ஆபத்து"

இவ்வண்ணம், முன்பு நடைபெற்ற ஆட்சியின் போக்கையும், அது நடந்துகொண்ட விதத்தையும் எண்ணியே, மக்கள் வோட்டளிக்க வருகிறார்கள்.

அத்தகைய மக்கள் முன்சென்று "அவன் இளைஞன்! அவன் அனுபவமில்லாதவன். எங்கள் கட்சி எப்படிப்பட்டது தெரியுமா? உலகமெங்கும் பேர் பெற்றது. இந்த நாட்டுக்கு, சுயராஜ்யம் வாங்கிக் கொண்டு வந்ததும், அதுதான்!" என்று பாடினால், மக்கள், ஒருமுறை பேசாமலிருப்பர். பிறகு, "ஐயா! அதற்குத்தான், அதிகாரத்தை ஒருமுறை கொடுத்துப் பார்த்துவிட்டோமே. உமது காலத்தில் நடைபெற்ற அக்கிரமம் போதாதா? போம்! போம்!!" என்று சொல்லிவிடுவர். மக்களின் இந்த சுபாவத்தை அறியாத காரணத்தாலேயே, ஆச்சாரியாரும், அவரது தலைவர் நேரு பண்டிதரும், பற்பல வாதங்களை, மக்கள் மன்றத்தில் கொட்ட ஆரம்பிக்கின்றனர்.

நேரு பண்டிதர், காங்கிரசின் இறந்தகாலப் பெருமைகளையெல்லாம் எடுத்துச் சொல்லியும்—ஏதாவது தவறுகள் செய்திருந்தால் மக்கள் மறந்துவிடவேண்டுமெனக் கோரியும்—ஆதரவு தேட முயல்கிறார்.

ஆச்சாரியாரோ, அப்படிச் சொல்லாமல், வயோதிகப் பருவம்—அனுபவம்—ஆண்டவனுக்கும் தனக்குமுள்ள தொடர்பு—இத்யாதிகளைச் சொல்லி, மக்கள் மன்றத்தின் ஆதரவைப் பெற முயல்கிறார்.

ஏழையும், ஏர் தூக்கியும், இதுபோன்ற அரசியல் தலைவர்களின் போக்கை, வெகு எளிதில் உணர்ந்துவிடுகிறான். ஒரு நாளைக்கு, அவன் வீட்டு அடுப்பில் புகை எழும்பாமலிருக்கும்போது, பக்கத்து வீட்டில் வாழும் மந்திரியின் மாளிகையில், ஆயிரம் பேருக்கு விருந்தளிக்கப்படும் வைபவமும்; சுதந்திரம் வாங்கிக் கொடுத்தோமெனச் செல்வோர், அதே சுதந்திரப் பூமியில் தவழும் மக்களைச் சுட்டுக் கொல்லும் கோரத்தையும்; அடிக்கடி காணும்படி நேரிடின்; அவனுள்ளம் எரிமலையாகிறது—எரிச்சல் கொள்கிறான்—அந்தக் கட்சியென்றாலே, திரும்பிப் பார்க்க, வெறுப்புக்கொள்கிறான்.

இப்படி, மக்கள் மனதில் வெறுப்பு வளர்வதைக் கண்டால், புத்திசாலிகளாயிருப்போர், தாம் முன்பிருந்து ஆட்சி நடத்திய கட்சியை விட்டு மாறி, புதிதாகத் திட்டங்களைக் கூறி, மக்களிடம் செல்வார்கள்.

பிலிப்பைனில், அப்படிச் சென்றவர்தான், மெக்ஸாஸே.

இந்தியாவில், அந்தப் பாதை சென்றவர்கள்தான், கிருபளானி கட்சியினர்.

இவ்விதம், மனம்மாறிச் செல்லுவோர், பதவிக்காக மட்டுமின்றி, நாட்டு நலனிலும் அக்கறைகொண்டு காரியம் பல செய்தால், தம்மையும் தமது சேவையையும் வளர்த்துக் கொள்ள வாய்ப்பு உண்டு. ஆனால், துரதிர்ஷ்ட வசமாக, காங்கிரசை எதிர்த்து முரசு கொட்டிய ஜயப்பிரகாஷ்—பிரகாசம்—தென்னேட்டி விசுவநாதம்— என். ஜி. ரங்கா— போன்றவர்கள், இந்த நாட்டில், பாதை மாறிச் சென்றுகொண்டிருக்கின்றனர்.

இதே, பாதையில், பிலிப்பைன் தலைவர் மெக்ஸாஸேயும்செல்வாரா? —என்பது பொறுத்திருந்து பார்க்க வேண்டிய விஷயம்.

ஆனால், அந்த நடைபெற்ற தேர்தலையும், நடைபெற்ற பிரச்சாரங்களையும் வைத்துப் பார்க்கும்போது, மக்கள் எதற்காக குரினோவை வெறுத்து —மெக்ஸாஸேயைத் தேர்ந்தெடுத்தார்களென்னும் உண்மை விளங்கும்.

அதனை, இங்குள்ளோர், உணர்ந்தால் போதும்.

★

வாழ்கிறது வடக்கு-தேய்கிறது தெற்கு

"வடநாடு, தென்னாடு — என்று பேசுகிறார்கள்!"

"அதனை, மக்கள், லட்சியப்படுத்தக்கூடாது. அவர்கள், பேதத்தை வளர்ப்பவர்கள்"

*

இவ்விதம், நம்மைப்பற்றிப் பேசுவோர் ஏராளம். ஏதோ இல்லாததையும் பொல்லாததையும் நாம் கூறுவதாகக் கருதி, எரிந்துவிழுவோரும் ஏராளமிருக்கிறார்கள். அவர்கள், சிந்தனைக்கு, கீழ்வரும் விபரத்தை வைக்கிறோம்.

விபரம் தருவது, நாமல்ல, சர்க்காரின், சென்சஸ் அதிகாரி. இந்தப் புள்ளி விபரம், மத்யசர்க்காரால், ரூ $1\frac{1}{2}$-கோடி செலவில் தயாரிக்கப்பட்டதாகும். அது, தெரிவிக்கிறது.

வட இந்தியாவில், சம்பாதிப்பவனைவிட தென்னாட்டிலிருக்கும் ஒருவனின் சம்பாத்தியம், குறைவு.

வடநாட்டைவிட தென்னாட்டில் வேலையில்லாதோர் தொகை மிகவும் அதிகம்.

இதுமட்டுமல்ல. அந்த விபரத்தில், இன்னும் பல அம்சங்கள், குறிப்பிடப்பட்டுள்ளன. அதில், ஒன்று, பெண்களின் கலியாண விஷயம் பற்றியதாகும். கலியாணமென்றால், பெண்ணைப் பெற்றோருக்கும் சரி, பெண்ணைக் கொள்வோருக்கும் சரி, செலவு செய்ய பணம் அவசியம். இந்தப் பணமிருந்தால்தான், காலாகாலத்தில், கல்யாணம் செய்துகொடுக்க முடியும். ஆனால், "தென்னாட்டில்தான், கல்யாணமாகாமலிருக்கும் பெண்களின் தொகை அதிகம்'

என்று சர்க்காரின் அறிவிப்பு, கூறுகிறது. ஆனால், வடநாட்டிலோ! 15-வயதுக்கு மேற்பட்டு, கலியாணமாகாமலிருக்கும் பெண்களின் தொகை மிகக் கொஞ்சம் என்றும், அந்தக் கணக்கு கூறுகிறது. அங்கே, கொஞ்சம்! இங்கு மட்டும் அதிகம்!!

அதுமட்டுமா? கடல்கடந்து சென்று அவதிப்படும் நம்மரும் தோழர்களைப்பற்றி, நாம் பேசும்போதும்—எழுதும்போதும்—ஏளனமாகக் கருதும் தேசியத் தோழர்களும் உண்டு. அவர்கள், கண்திறக்கும்படி, மேற்படி அறிக்கையில் அதுசம்பந்தமாகவும் கூறப்பட்டிருக்கிறது.

'வெளிநாடுகளில் சென்று வசிப்போரில் தென்னாட்டவர்களே, அதிகம் இருக்கின்றனர்"

இந்த வித்யாசம் ஏன்? அகண்ட பாரத முழுதும் ஒன்று! அனைவரும் இந்திய மக்களே என்று சொல்லு! அதுவே, நம் ஆத்மீக பலம் என்று நினை! — என்று கூறுகிறார்களே, ஐக்கியம் விரும்பிகள், அவர்கள் நினைக்கவேண்டும். ஏனிந்த நிலை? வடக்கு வாழவும், தெற்கு தேயவுமான இந்த நிலைமை ஏற்படக் காரணம் என்ன?

இதுபற்றி இதுவரை, நாம் எவ்வளவோ, காரணங்கள் காட்டி வந்துள்ளோம். ஆனால், அதனைக் கேலிக்கூத்தெனக் கருதியோர் பார்வைக்கு இன்று விளக்கம்தரவிருப்புகிறோம். விளக்கமும், நாம் கூறுவதல்ல—அவர்கள் ஏடு, 'சுதேசமித்திரன்' 13—11—53 அன்று தலையங்கத்தில் தீட்டியிருப்பது:—

"இந்தியாவின்மற்ற பகுதிகளைவிட தென்னிந்தியாவிலேயே சம்பாத்தியமுள்ளவர்களின் விகிதாசாரம் மிகக் குறைவு. அதாவது இங்கு வசிப்போரில் அத்தகையோரின தொகை 26 சதவிகிதந்தான். பிறர் தயவால் பிழைப்பவர்களின் எண்ணிக்கையும் தென்னிந்தியாவில்தான் அதிகம். அவ்வெண்ணிக்கை இங்குள்ள மொத்த ஜனத்தொகையில் 69 சதவிகிதம்.

இந்த தேசத்தில் மற்றபகுதிகளைவிட வடக்கு, வடமேற்கு மத்திய கிழக்குப் பகுதிகளில் முறையே சம்பாத்தியமுள்ளவர்களின் எண்ணிக்கை அதிகம். இதற்கு விவசாயச் செழிப்பைவிட அப்பகுதிகளில் மற்ற தொழில்களும், வர்த்தகமும் வளர்ச்சியடைந்திருப்பதே முக்கிய காரணமாயிருக்கக்கூடும். மேற்குறித்த புள்ளி விவரங்களைக் கவனிக்கும் யாரும் கடல்கடந்த இந்தியாவில் தென்னாட்டவரே மிக்க அதிகமாயிருப்பதுபற்றிச் சிறிதும் வியப்படைவதற்கில்லை. பிழைப்பை நாடி வெளிதேசங்களுக்குச்சென்று குடியேறிய இந்தியர்களில் பாதிப் பேருக்குமேல் தென்னிந்தியர் என்பது குறிப்பிடத்தக்கது. சமீபகாலத்தில் பர்மா, மலேயா முதலிய இடங்களிலிருந்து தமிழர் பலர் பல்வேறு காரணங்களை முன்னிட்டு தாயகம் திரும்பியிருக்கலாம். ஆனால் தென்னாட்டில் பிழைப்புக்கான வசதிகள் பெருகிவிட்டதாகஎண்ணி அவர்கள் திரும்பவில்லை. தொழில்—வர்த்தகத் துறைகளில் நாட்டின் மற்ற பகுதிகளைவிட எப்போதும் போல் இப்போதும் தென்பகுதிதான் மிகவும் மட்டமானது என்பதை ஜனக்கணித அறிக்கை தெளிவாக அறிவுறுத்துகிறது. இந்தியப் பொருளாதார அபிவிருத்திக்குத் திட்டமிடும் பொறுப்புள்ளவர்கள் இதிலிருந்து அறியக் கிடக்கும் ஒரு உண்மை மிகப்பட்டவர்த்தமானது. அதாவது அத்தகைய அபிவிருத்தித் திட்டங்களில் முதலிடம்தென்னிந்தியாவுக்கு உரிய தென்பதை அவர்கள் உணர்வரென்று எண்ணுகிறோம். சமத்துவ அடிப்படைமீதமைந்த ஒரு சமுதாயத்தை உருவாக்குவதென்ற கொள்கையை ஒப்புக்கொள்ளும் யாரும் தென்னிந்தியாவின் முதல் பாத்தியதையை ஆட்சேபிக்க இடமில்லை. மேலும் இப்பகுதியில் விவசாயத்தையும் மற்ற தொழில்களையும் வளர்க்க வசதிகள் இல்லாமல் போய்விடவில்லை. குறிப்பாக நெய்வேலிச் சுரங்கத் திட்டம் அமுலுக்கு வந்துள்ள இந்நிலையிலாவது மத்திய அதிகாரிகள் இப்பிராந்தியத் தொழில் வளர்ச்சிக்குப போதிய முக்யத்துவம் அளிப்பரென்று எண்ணுகிறோம்."

நாம் சொன்னால், கடுகடுத்த தோழர்கள், இப்போது சிந்தித்துப் பதில் கூற விரும்புகிறோம். வாழ்வது, நாமா! வடநாடா? வறுமையால் வாடுவது நாமா? வடநாடா?

வருந்துகிறோம்

நமது இயக்க அனுதாபியும், பிரபல மரத்தொட்டி வியாபாரியுமான தோழர் N. K. ரங்கநாதன் அவர்கள் தமது இளம் வயதில் காலமானார் என்ற செய்தியை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். துயரில் மூழ்கியுள்ள அவரது குடும்பத்தினருக்கு நம்முடைய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அத்தர் மணம்—"அங்கே!"

[ப. வாணன்]

"மனித சமுதாயத்தின் வரலாறு, கடந்துபோன காலங்களின் குறிப்புகள் மாத்திரமல்ல; மனிதனின் வருங்காலத்திற்கு 'கலங்கரை விளக்கம்'" என்று கூறுவர்.

இன்று நமது நாடு இருக்கின்ற நிலைமையையும், நம்முன் இருக்கும் வருங்காலத்தையும் நோக்கும் போது, கடந்துபோன சரித்திரப் பகுதிகள்தான், திரும்ப, திரும்ப அழைக்கப்பட வேண்டியிருக்கிறது.

அதுவும் குறிப்பாக நமது பூபாகத்தின் பிரதமர் ராஜகோபாலாச்சாரியார் வெளியிடும் வேடிக்கை வாதங்களைக் கேட்கும்போது, வரலாற்றின் துணை நமக்கு மிக, மிக அதிகமாக தேவைப்படுகிறது.

"நாம்தான் நித்திய தரித்திரத்திலே இருக்கிறோம். மீண்டும் திரும்பவும், திரும்பவும் நம்முடைய தரித்திரத்தைப்பற்றி பேசி என்ன பயன்? நமது நேரு வெளிநாட்டிலாகாவை திறமையாக நடத்தி, நமக்கெல்லாம் நல்ல மதிப்பை வாங்கிக்கொடுத்திருக்கிறார் நீங்களெல்லோரும், அதை ஒவ்வொறை மாத்திரமே கண்டு பெருமைப்படலாம். அது ஒன்றே நமக்குப் போதும். மதிப்புத்தான் பெரியதே தவிர, செல்வம் அல்ல!"

என்றெல்லாம் நேரு பண்டிதரின் பிறந்த தின விழாவைக் கொண்டாட புறப்பட்ட கருப்புக் கண்ணாடிக்காரர் பேசியிருக்கிறார்.

நேரு பண்டிதரின் பிறந்த நாளிலே அவருக்குச் சூட்ட வேண்டிய புகழ் மாலைகள் ஏதேதோ இருக்க, வெளிநாட்டிலாகாவிலே அவர் செய்த வேலைகளையும், அதை பெருமையாகக் கூற நினைத்து, மிகத் தவறான வாதத்தையும் கிளப்பிவிட்டிருக்கிறார், ஆச்சாரியார். பாபம்! எந்த இடத்திலேயும் எதிர்க்கட்சியை ஒரு தாக்கு தாக்காமல் ஆச்சாரியாரால் இருக்க முடியாது. எதையாவது சொல்லி மக்களிடம் தி. மு. க-விற்கு இருக்கும் செல்வாக்கைக் குறைக்க வேண்டுமென்ற அபார ஆசை அவருக்கு. அந்த ஆசையிலே அரசியல் அரிச்சுவடி தெரிந்தவர்கள் கூட, கைகொட்டி நகைக்கும்படியான முறையில், 'தரித்திரத்தைப்பற்றியே சிலர் பேசிக்கொண்டிருப்பர். ஆனால் நேருவின் வெளிநாட்டுக் கொள்கையால் நமக்கு கிடைத்திருக்கும் உலக மதிப்பைப் பாரீர்!" என்று பேசியிருக்கிறார்.

ஆச்சாரியாரின் பிரச்சாரத்திலே காணும் அர்த்தமற்ற தன்மையை ஆராயும் முன்னர், ஒரு தேசத்தின் வெளிநாட்டுக் கொள்கையைப் பற்றிய சில அடிப்படை உண்மைகளை நம் ஞாபகத்திற்குக் கொண்டுவர வேண்டும்.

*

பொதுவாக, ஒரு தேசத்தின் வெளிநாட்டுக் கொள்கை இரண்டு அடிப்படைகளில்தான் அமைக்கப்பட முடியும். அந்த நாட்டின் உள்நாட்டுக் கொள்கை முதலஸ்திவாரம்.

இரண்டாவது, உலகத்திலிருக்கும் பல்வேறு நாடுகளின் வெளிநாட்டுக் கொள்கை

சென்ற 1914—18-ல் நடந்த பெரும் போருக்குப் பிறகு, உலகத்திலே சமாதானம் நிலையாக இருக்க வேண்டுமென்று அரும்பாடுபட்டவர் அமெரிக்க ஜனாதிபதி உட்ரோ வில்சன். வாஷிங்டனிலிருந்து கடல் தாண்டி பாரிஸ்வரை வந்து சமாதான உடன்படிக்கை செய்தார். தோற்கடிக்கப்பட்ட ஜெர்மனியை நிர்மூலமாக்க திட்டம் போட்ட பிரான்ஸ், இத்தாலி, ஆங்கில நாடுகளை அடக்கி, ஜெர்மன் மக்களுக்கு மதிப்புக் கொடுத்து, ஐரோப்பாவிலே சமாதானம் என்றும் நிலைத்திருக்க வேண்டும் என்பதற்காக அரும்பாடுபட்டார். [illegible], அமைதி என்று அவர் தன் உடல் நலத்தையே கெடுத்துக்கொண்டு அமெரிக்கா போய்ச் சேர்ந்தார். ஆனால் நான்காண்டுகள் பெரும் போரை நடத்தி உலகத்திற்கு அமைதியை அழைத்து வந்த அந்த பெரும் போராளியினுக்கு அமெரிக்காவிலே காத்துக்கொண்டிருந்தது என்ன தெரியுமா?

அமெரிக்க முதலாளித்துவத்தின் புலியொத்த எதிர்ப்பு!

'என்னுடைய வியாபாரத்தை, வில்சன் சமாதானம் கெடுத்து விட்டது!" என்று கதறிவிட்டனர், அமெரிக்க ஆலை முதலாளிகள். நாடு பூராவும், அமெரிக்க மக்களின் நல்வாழ்வுக்குத் தேவையான வியாபார வழியை வில்சன் கெடுத்துவிட்டார் என்று பிரச்சாரம் செய்தனர்.

கடைசி நிமிஷத்திலே, உள்நாட்டிலே தான் செய்யத் தவறியதை வில்சன் உணர்ந்தார். போர் காலத்திலே அமெரிக்காவிலே வளர்ந்த முதலாளிக் கூட்டம், வில்சனைக் கவிழ்த்தது. ஆதிபத்தியக்காரர்களை காப்பாற்ற ஒத்துக்கொண்ட ரிப்பப்ளிகன் கட்சி வில்சனை தோற்கடித்தது. உள்நாட்டிலே தேவைப்பட்ட சமுதாயப் பொருளாதார சீர்திருத்தத்தைச் செய்யத் தவறிய காரணத்தால், வில்சனின் மிக உயர்ந்த வெளிநாட்டுக் கொள்கை காற்றோடு காற்றாய் மறைந்தது. வில்சன் அகற்றப்பட்ட மறுதினத்திலிருந்துதான் அமெரிக்க முதலாளித்துவம் ஜெர்மன் முதலாளித்துவத்தோடு சேர்ந்தது. வில்சனுடைய சமாதானப் பாதையிலே திரும்பிக் கொண்டு வரப்பட்ட ஜெர்மனியில் இட்லர் தோன்றினான். இட்லர் அறையில் அமெரிக்க முதலாளி ஹென்றிபோர்டுவின் படம் மாத்திரம் எப்பொழுதும் தொங்கவிடப்பட்டிருந்தது என்பது மாத்திரமே இந்த உண்மையை விளக்கும்.

இதே மாதிரி, ஆனால் நேர் எதிரான பலனைக் கொடுத்த, மற்றொரு வரலாற்று சம்பவத்தையும் கவனிக்கலாம்.

முதல் பெரும் போரின்போது ரஷ்யா ஆங்கில—அமெரிக்க நாடுகளோடு சேர்ந்து ஜெர்மனியை எதிர்த்துப்போர் புரிந்தது. ஆனால், அந்த நேரத்திலே ரஷ்யாவிலே வறுமை கோரத்தாண்டவமாடியது.

நிலச்சுவான்தார் கொடுமை தாங்காமல் குடியானவர்கள் நாடோடிகளாய் ஓடிக்கொண்டிருந்தனர். பிரபுக்களின் அட்டகாசமும், அரச பரம்பரையின் ஆடம்பரமும், மதுவும் மங்கையும் மதத்திற்கு சொந்தமோ என்று எண்ணுமளவு தவறு வழி நடந்த ரஸ்புடீனும், ரஷ்யாவில் மக்கள் வாழ்க்கையில் சொல்லொணா துன்பத்தைஏற்படுத்தினர்.

இந்த நிலையில் ஜெர்மனியுடன் போர் ஏன்; அதற்கு ஆகும் செலவை செத்துக்கொண்டிருக்கும் எங்களுக்காக செலவழிக்கக்கூடாதா என்று கேட்டனர், ரஷ்ய மக்கள்.

"இல்லை......இந்தப்போர் ரஷ்யா சரியான சமயத்தில் நேச நாடுகளுக்கு உதவி செய்கிறது என்ற உலக மதிப்பைக் கொடுப்பது! ஆகவே தரித்திரத்தைவிட, மதிப்பே பெரியது என்று கூறாமல் கூறி போரைத் தொடர்ந்து நடத்தினான் ஜார் மன்னன். உள் நாட்டிலாகாவையும், வெளி நாட்டிலாகாவையும் சம்பந்தப்படுத்தாமல், தான் தோன்றித்தனமாக உலக மதிப்புக்காக நடத்தப்பட்ட இந்த வெளிநாட்டுக் கொள்கையால் ஜார் அடைந்த பலன் என்ன? அவன் அரசாங்கமே கவிழ்ந்தது. நவம்பா புரட்சி பூத்தது! மக்கள் புகுந்தனர், மன்னன் வாழ்ந்த இடத்தில்!

அடுத்த சில மாதங்களிலேயே நடந்துகொண்டிருந்த சண்டை நிறுத்தப்பட்டு, ஜெர்மனியோடு சமாதான உடன்படிக்கை செய்யப்பட்டது. உள்நாட்டிலே சுபிட்சமேற்படாதவரை! வெளிநாட்டுக்கொள்கையில் மதிப்புக்காகவோ புகழுக்காகவோ எந்தக் காரியமும் செய்யமுடியாது என்று கம்யூனிஸ்ட் அரசாங்கம் அறிவித்தது.

இப்படி வரலாற்றின் எந்தப் பகுதியை புரட்டிப் பார்த்தாலும், உள்நாட்டில் சரியான நடைமுறைக்கொள்கை இல்லாதவரை வெளிநாட்டுக் கொள்கைகள் வெற்றி பெற்றதேயில்லை என்பது நன்கு தெரியும்,

— நேரு பண்டிதரின் உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கைகளை நோக்கும்போது வில்சனின் சமாதான நோக்கம் கொண்ட வெளிநாட்டுக் கொள்கையும், ஜார் அரசாங்கத்தின் உள்நாட்டுக் கொள்கையும்தான் நம் கண்முன் தெரிகிறது.

சுதந்திரமடைந்த இந்தியத் துணைக்கண்டத்திலே மக்கள் நலனுக்குப் பாடுபட விரும்பும் எந்த அரசியல் வாதியும் ஆரம்பித்து இருக்க வேண்டிய காரியம், இந்தத் துணைக்கண்டத்திலே இருந்துவரும் அறியாமையையும் வறுமையையும் போக்க வேண்டிய திட்டங்களைத்தான். இந்த பூபாகத்திலே வாழும் முப்பத்தைந்துகோடி மக்கள்பசிக்கு உணவுமின்றி வாடும்பொழுது, வெளிநாட்டிலேபோய் புகழ் சம்பாதித்துவருகிறேன் என்று கூறுவது அர்த்தமற்றது. ஆசியாவின் தலைமை, உலக நாடுகளில் பெருமை முதலிய புகழ் விளக்குகளின் வெளிச்சத்தை நாடிய நேரு பண்டிதருக்கு உள்நாட்டிலே செய்ய வேண்டிய பல வேலைகள் கவனத்திற்கு வரவில்லை.

'கம்யூனிஸ்ட் கொள்கைக்கு உலகத்தைத் திருப்புவோம்' என்று கங்கணம் கட்டி புறப்பட்டிருக்கும் ரஷ்யநாடுகளுக்கும், ஜனநாயகப் போர்வையில் அதை எதிர்க்கப் புறப்பட்டிருக்கும் ஆங்கிலோ — அமெரிக்க நாடுகளுக்குமிடையில் நம்முடையவார்த்தைகளுக்கு ஒருக்காலும் மதிப்பிருக்க முடியாது. அப்படி ஒவ்வோர் சமயங்களில் ஏற்படுவது போல் தோன்றுவதின் காரணம், நாமிருக்கும் பூபாகத்தின் முக்கியத்துவத்தினாலும், நம்முடைய ஜனத்தொகையைக் கண்டு இரண்டு வல்லரசுகளும் பயப்பட வேண்டிய காரணத்தாலும்தான்.

இது ஒருபுறமிருக்க, நேரு பண்டிதரின் வெளிநாட்டுக் கொள்கையின் பெரும் தவறு அதன் அஸ்திவாரமான உள்நாட்டுக் கொள்கையில்தானிருக்கிறது.

நமக்கு சுதந்திரம் வந்து ஆறு ஆண்டுகளாகியும், இந்திய உபகண்டத்தில், அதுவும் குறிப்பாக திராவிடத்தில் ஏற்பட்ட பட்டினிச் சாவுகள் அதிகம்.

நிலச்சுவான்தார் முறையை ஒழித்து நிலத்தை உழுபவனுக்கு சொந்தமாக்கி இருந்தால் ஓரளவு நிச்சயமாக உணவுப் பஞ்சத்தைத் தீர்த்திருக்கலாம்.

அடுத்தபடியாக மனிதனின் அடிப்படைத் தேவைகளான 'உடையும் இருக்க இடமும்' கொடுக்க ஏற்பாடுகள் செய்யப் படவில்லை.

அரசாங்கத்திலே ஊழல் மலிந்து கொண்டிருக்கிறது. பள்ளிகளின் தரம் குறைந்து, அறியாமையின் நிலை வளர்ந்து கொண்டே செல்கிறது.

இப்படி மக்களுக்குத் தேவையான காரியங்களை செய்யத்தேவைப் படும் பணங்களைக் குவித்துத்தான் வடநாட்டிலே பிரமாண்டதொழிற்சாலைகள் கட்டப்படுகின்றன

இப்படி, நாட்டிலே, விவசாயத்தையும், அடிப்படை தேவைகளையும் புறக்கணித்து, சாம்ராஜ்யம் உண்டாக்கும் ஆசையில்தொழிற்சாலைகள் அமைக்க ஆரம்பித்தால், நாட்டில் முதலாளித்துவம் தோன்றாமல் வேறென்ன நிலை ஏற்படமுடியும்? அந்த நிலை ஏற்கனவே ஏற்பட்டு விட்டது. ஒவ்வொரு நாளும் டாடாக்களும், பிர்லாக்களும் தம் எண்ணிக்கையை அதிகமாக்கிக் கொண்டிருக்கின்றனர். தொழில்கள் தேசியமயமாவதை அறவே

தூத்துக்குடித் தோழர்கள் சிறையில் கிடக்கிறார்கள்!

★

நான்கு மாதங்களாகிவிட்டன!!

✲

நம்மோடு அவர்கள் உலவுவது எந்நாள்?

✲

நம்மருந் தோழர்களை, விடுவிக்க வேண்டாமா?

✲

தோழர்காள்!
உங்கள் பங்கைச் செய்தீர்களா?

முகவரி:— அ. பொன்னம்பலனார்,
'அறிவகம்'
ராயபுரம்—சென்னை.

தடுத்து விட ஏற்பாடுகள் செய்து விட்டு மிகப்பெரிய மூலதனத்தை ஆங்கிலோ—அமெரிக்க முதலாளிகளோடு கூட்டாகப் போட்டு, நாடெங்கும் தொழிற்சாலைகளை ஆரம்பித்திருக்கின்றனர் — ஆரம்பிக்கின்ற திட்டம் போட்டுக் கொண்டே இருக்கின்றனர். இவர்கள் நிலை வளர வளர, நேரு பண்டிதரின் நிலை என்னவாகும். தொழிற்சாலைகள் நிர்மாணிப்பது என்று முடிவு செய்து விட்டால் அதற்கு கட்டாயம் ஆங்கிலோ—அமெரிக்க முதலாளித்துவ உதவிதான் வேண்டும். அப்படிப்பட்ட நிலைமையில் நாட்டை தொழிற்சாலை வளமுள்ள தாக்க முடிவு செய்த நேரு விட்டுக் கொடுத்துதான் ஆகவேண்டும். அப்படி விட்டுக் கொடுத்தால், அமெரிக்காவின் உதவிக்கு, பதில்உதவி செய்தாக வேண்டும். அமெரிக்காவிற்கு பண உதவி தேவையில்லை—பஜ கோவிந்தமும் தேவையில்லை. ரஷ்யாவுக்கு எதிரான வரிசையில் இந்தியா நிற்க வேண்டும்!

நாட்டிற்கு அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இடம் இவைகளை விட்டு விட்டு, தொழிற்சாலைகள் அவசரப்பட்டு நிறுவ முயற்சிக்கும் நேருவின் உள்நாட்டுக் கொள்கையைக் காணும் எவரும் இந்த உண்மையைக் காணமல் போகார்.

தவறான உள்நாட்டுக் கொள்கை அவரை மிகத் தவறான வெளிநாட்டுக் கொள்கைக்குத்தான் இழுத்துச் செல்லும். அப்படி அவர் தப்பிக்க முயன்றால், வில்சனின் கதிதான் அவருக்குக் கிடைக்கும்.

இந்த உண்மையை மறந்த ஆச்சாரியார், அன்று சென்னையில் பேசும்போது, "தரித்திரம்தான் நம் நாட்டில் இருக்கிறதே. வெளிநாட்டுக் கொள்கையால் நேரு நமக்கு வாங்கிக் கொடுத்திருக்கும் செல்வாக்கைக் கண்டு மகிழ்வீர்!" என்று கூறி விட்டார்.

உள் நாட்டிலே தரித்திரம் சாஸ்வதமாக இருப்பதால் வெளிநாட்டுக் கொள்கையை அது பாதிக்காது என்று ஆச்சாரியார் கூறுவது அதிசயத்திலும் அதிசயம்.

வறுமை வளர்ந்து கொண்டு போனால், சுதந்திரத்தோடு எப்படி வாழ முடியும்?

உள்நாட்டிலே முதலாளித்துவத்தை வளர விட்டுக் கொண்டு வெளிநாட்டுக் கொள்கையை எவ்வளவு திறம்பட கையாண்டாலும் நாளாவட்டத்தில் பயனிராது.

முன்னாள் அமெரிக்க அரசாங்கக் காரியதரிசி, காலஞ்சென்ற கார்டல் ஹல் "உண்மையானபலமின்றிகூறப்படும் மிரட்டல் வார்த்தைகள் கேலிக்குரியவைகள்" என்று எழுதிப் போயிருக்கிறார். இதை நேரு பண்டிதரும், ஆச்சாரியாரும் நன்கு ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். உள் நாட்டிலே வறுமையை தாண்டவமாட விட்டுவிட்டு முதலாளித்துவத்திற்கு ஆக்கம் தரும் வகையில் தொழில் திட்டங்களை போட்டுக்கொண்டு, வெளிநாட்டுக் கொள்கையிலே நாமடைந்த வெற்றி பாரீர், என்று கூறுவது நீண்ட நாளைக்கு முடியாது.

ஊரெல்லாம் சுற்றினாலும், வீட்டுக்குத்தானே வந்தாகவேண்டும்.

அதேமாதிரி, சர்வ தேசிய அரங்கில் எப்படி நடந்துகொண்டாலும், உள்நாட்டிலே ஏற்றத் தாழ்வுகள், பேதாபேதங்கள் ஒழிக்கப்படாத வரை, ஒழிக்கப்படவேண்டிய முறையில், சமுதாய பொருளாதார திட்டங்கள் தீட்டப்படாதவரை, நேருவின் அயல்நாட்டுக் கொள்கை குறைபாடு உடையதுதான். இதை உணர்ந்து இதற்கான வழிகள் எது என்று சிந்திப்பதை விட்டுவிட்டு, அதற்கு நேர் எதிராக தரித்திரம் என்றுமிருப்பதுதான் என்று கேலியாகக் கூறியிருக்கிறார், ராஜகோபாலாச்சாரியார்.

"நாங்கள் உள்நாட்டிலே எதையும் செய்யவில்லை. இருக்கின்ற தரித்திரம் அப்படியேதான் இருக்கிறது. ஆனால் வெளிநாட்டிலே நேரு செய்திருப்பதைக் கண்டு களிப்பீர்!" என்று ஆறாண்டு ஆட்சியில் இந்தத் தேசியத் தோழர்கள், மக்கள் வறுமையை நீக்க எந்த அணுவையும் அசைக்காதத் தன்மையை விளக்குவதுபோல்தான் இருக்கிறது, ஆச்சாரியாரின் வார்த்தைகள். அப்படி ஆச்சாரியார் கூறுவாரானால், அதை நாம் ஒத்துக்கொள்ளலாமே!

திராவிட நாடு பொங்கல் மலர்

சி. என். ஏ. தீட்டும்
கதை, கட்டுரைகள்
தாங்கி

*

அதிக பக்கங்களுடன்

*

அழகிய முகப்புடன்

*

சிந்தனைச்
சித்திரங்களுடன்

*

கருத்து விருந்தளிக்கும்!

*

இந்த மலர், ஒரு வரலாற்று ஓவியம்.

விலை ரூ 1.

★

சந்தாதாரர்கள் டிசம்பர் 30-ந்தேதிக்குள், ரூ 1, அனுப்பி வைத்தல் வேண்டும்.

ஏஜண்டுகள் டிச 30-ந்தேதிக்குள், மலரின் தேவையையும் அதற்குரிய, தொகையையும் அனுப்ப வேண்டும்.

முன் பணமில்லாதோருக்கு கண்டிப்பாக மலர் அனுப்பப்பட மாட்டாது.

நிர்வாகி

ஆச்சாரியாருக்கு எச்சரிக்கை

கண்டனக் கணைகளைத் தொடுக்க வேண்டும்!

தோழர் அண்ணாதுரை உள்ளிட்ட தலைவர்கள் ஐவரும், இந்தத் திங்கள் (நவம்பர்) 30ந் தேதி விடுதலையாவார்கள் என்பதும், அவர்களுக்கு நீதிமன்றம் அளித்த தண்டனை நாள் முழுவதையும் அனுபவித்த பிறகே வெளியே வருகிறார்கள் என்பதும் யாவரும் அறிந்ததே.

தலைவர்களைச் சிறையிலடைத்தபின், ஆச்சாரியார் சென்ற இடங்களிலெல்லாம், 'தலைவர்களை விடுதலை செய்'' என்று இடியென எழுந்த மக்கள் குரலைக் கேட்டு நடுக்கங்கொண்ட ஆச்சாரியார், கம்மிய குரலில், 'நானா அவரைச் சிறைக்கனுப்பினேன்; நீதிதான் அவர்களைச் சிறைக்கனுப்பியது. நான் என்ன செய்வது?'' என்றார். ஆனால் அவரே இன்று அவராலும், மற்றவர்களாலும் மதிக்கப்படவேண்டிய நீதியை, தன் வேலைக்காரன் என்று நினைக்கிறார்!

நாம், அவருக்கு 'முதல் நெம்பர் எதிரிகள்' என்று அவர் சொன்னதை நாம் அவருக்குத் திருப்பிச் சொல்லவேண்டிய கஷ்டத்தை நமக்கு அளிக்காமலே, அவரே தமது அடாத செயல் மூலம் அதனை அறிவிக்கிறார்.

ஐம்பது ஆண்டுகளாக ஆராய்ந்து ஆராய்ந்து கண்டுபிடித்த அவருடைய சமுதாய அழிவுத் திட்டமான வர்ணாசிரம கல்வி முறையை எதிர்த்தோம்; அவர் வாழும் கோட்டையிலேயே பலர் எதிர்த்தார்கள்—ஏன்—'பொதுவாக நாங்களும் எதிர்க்கிறோம்' என்று சொல்வதைப்போல அண்மையில் விருதாசலத்திலும், காங்கயத்திலும் நடந்த பொதுத் தேர்தல் நிரூபித்து, காங்கிரஸ் முகத்திலும் கரி பூசிவிட்டது என்பதை அவர் மறக்கமுடியாது.

இதன் பிறகாவது அவர் உண்மையான ஜனநாயகவாதியாக இருந்திருந்தால், திருந்தி, தன் தவறை ஒப்புக்கொண்டு அவரது இடத்தை காலி செய்திருக்கவேண்டும்: அல்லது, திட்டத்தைக் கைவிட்டிருக்கவேண்டும். இரண்டையும் அவர் செய்யவில்லை — செய்யமாட்டார் — வெளியிலே அவருக்கு எதிராக இருக்கும் சக்திகள், அவரை உணரவைக்கும் வரையில்!

ஆகவே, சாவின் ஓரத்திலே இருந்தவனும், மகிழ்வின் உச்சியிலே இருந்தவனும் பலமுறை இடம் மாறியிருக்கிறார்கள் என்ற சரித உண்மையை நாம் அவருக்குச் சுட்டிக் காட்டி, பிரதமரை, 'பெர்லின் நோக்கி நடக்க வேண்டாம்' என்று எச்சரிக்கை செய்கிறோம். இந்தக் குரல் ஒரு லட்சம் குரல்களின் பிரதிநிதித்துவம் வாய்ந்தது என்பதையும் அவருக்கு அறிவிக்கிறோம்.

கட்சியின் வழுக்குப் பலகையிலே நின்றுகொண்டு, எடுத்ததற்கெல்லாம் ஆதரவை விந்தியத்திற்கு அப்பாலிருந்து எதிர்பார்த்துக்கொண்டு, கருப்புக் கொடிகளைக் கண்டு, கண்டனக் கணைகள் பலவற்றைத் தாங்கி, புதிய கலகங்களுக்கும், புதைந்துபோன பிரேதங்களின் கல்லறைகளுக்கும் காவலர்களாய் இருப்பவர்கள் யார் என்பதை அடையாளம் கண்டுகொள்ள, நீதிக்கு அதிக நாள் பிடிக்காது என்பதை அவர் இன்று அறிய மறுக்கிறார், அதிகார போதையால்!

ஆச்சாரியார் எண்ணப்படி, தோழர் அண்ணாதுரை உள்ளிட்ட தலைவர்கள் ஐவரும் மீண்டும் சிறைக்குள்ளேயே வாட நேர்ந்தால், 'திராவிடத்தின் நெஞ்சுறுதியைத் தாண்டிச் செல்லும் ஆற்றல் எதற்கும் இல்லை.' என்பதை வலியுறுத்திக் கூறவேண்டிய நிலைமைக்கு, நாம் அழைத்துச் செல்லப்பட்டவர்களாகிவிடுவோம்.

ஆகவே, இதைக் கண்ணுறும் தோழர்கள், பொது மக்கள், நகர மன்றத் தலைவர்கள், உறுப்பினர்கள், சட்டசபை அங்கத்தினர்கள் — ஏன்— சாகடிக்க முடியாத ஜனநாயகத்தைச் சாகடிக்க முடியும் என்ற சர்வாதிகார மனப்போக்கை அதட்டி நிறுத்தும் ஆற்றலுடையோர் அனைவரும் — தங்கள் தங்கள் கண்டனத்தை ஆச்சாரியாருக்கு உடனடியாக அனுப்பி வைக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ.
பொறுப்பாளர்,
தி. மு. கழகத் தலைமை நிலையம்.

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
45, Tirukkachinambi St., Kancheepuram.